வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු





Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 03.04.2025 வியாழக்கிழமை இதழ் : 95 பக்கங்கள் : 12

# மோடியின் பாதுகாப்புக்காக விசேட குழு கொழும்பு வந்தது!

## கொழும்பு, அநுராதபுரத்தில் சிறப்பு பாதுகாப்பு, போக்குவரத்துத் திட்டம்

கொழும்பு, ஏப் 03

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நாளை 4ஆம் திகதி இலங்கைக்கு அதிகாரபூர்வ பயணம் மேற்கொண்டு வருகைதர உள்ளார். இந்த நிலையில் அவரது வருகைக்கு முன்னதாக இலங்கை பாதுகாப்பு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்ற இந்தியாவிலிருந்து விசேட பாதுகாப்புக் குழுவொன்று கொழும்பை வந்தடைந்துள்ளதாக புதுடில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன.**



பிரதமர் மோடி எதிர்வரும் 4ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை இலங்கைக்கு அரசு முறை பயணம் மேற்கொள்ள உள்ளார்.

மோடியின் வருகையின்போது கொழும்பு மற்றும் அநுராதபுரத்தில் சிறப்புப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை கட்டுநாயக்காவில் சர்வதேச விமான நிலையத்தில் மோடி தரையிறங்கியது முதல் 6ஆம் திகதி அவர் செல்லும் வரை கொழும்பு உட்பட பல பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமருடன் வெளியுறவு அமைச்சர்

11

## ஏப்ரல் 5 முதல் 15 வரை எமது நிழல் சிறிது நேரம் மறையும்!

கொழும்பு, ஏப். 03

ஏப்ரல் 5 முதல் 15 வரை நிழல் சிறிது நேரம் மறையும் அரிய நிகழ்வு நிகழவுள்ளதாக வானியலாளர் அநுர சி.பெரேரா தெரிவித்தார்.

வானியலாளர் அனுர சி.பெரேரா மேலும் தெரிவிக்கையில்,

ஏப்ரல் மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் சூரியன் நம் நாட்டின் மேல் அதன் உச்சத்தில் இருக்கும். இந்த உச்ச நிலை ஏப்ரல் 5 முதல் 15 வரை நீடிக்கும். கொழும்பில் சூரியன் உச்சம் பெறுவது ஏப்ரல் 7 ஆம் திகதி நிகழ்கிறது.

அன்று மதியம் 12:12 மணிக்கு யாராவது

11

## பிரிட்டனின் தடை தொடர்பில் ஆராய விசேட குழு அமைப்பு!

கொழும்பு, ஏப். 03

பிரிட்டனால் 04 இலங்கையர்களுக்கு தடை விதிக்கப்பட்டமை தொடர்பாக ஆராய விசேட குழுவொன்றை அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார்.

11

## இந்தியாவுடன் இலங்கை இரு தரப்பு ஒப்பந்தங்கள்

கொழும்பு, ஏப். 03

இந்தியாவுடன் சுகாதாரம், வலுசக்தி , டிஜிட்டல் பொருளாதாரம்,மற்றும் பாதுகாப்பு துறைசார் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு

11

## இலங்கை - இந்திய மீனவர் பிரச்னைக்கு இங்கு வரும் மோடி தீர்வை தரவேண்டும்

### யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சமாசம் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஏப். 03

இலங்கைக்கு வரும் இந்தியப் பிரதமர் இலங்கை - இந்திய மீனவர் விவகாரத்துக்கு சரியான தீர்வொன்றை வழங்கவேண்டுமென யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் பகிரங்க கோரிக்கையொன்றை விடுத்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் நாட்களில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் இக் கோரிக்கையை மீனவர்கள் விடுத்துள்ளனர்.

இதற்கமைய பிரதமர் மோடிக்குத் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றையும்

11

## உணவுப்பொருட்களின் விலை மேலும் உயரும்!

கொழும்பு, ஏப். 03

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை முறையாக அமுல்படுத்தாவிடின் எதிர்வரும் இரு வாரங்களில் ஹோட்டல் உணவுப் பொருட்களின் விலை மேலும் உயரும் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ஹர்ஷண ருக்ஷான் தெரிவித்தார்.

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை

11

## யாழில் பிறந்து 43 நாள்களான பெண் குழந்தை உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஏப் 03

யாழில், பிறந்து 43 நாட்களேயான பெண் குழந்தை ஒன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளது. இளவாலை - உயரப்புலத்தைச் சேர்ந்த குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

11

## தேர்தல் செயல்பாட்டுக்கு இன்று வரை தடை நீடிப்பு

கொழும்பு, ஏப். 03

வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களுடன் தொடர்புடைய உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் நடவடிக்கைகள்

11

## யாழில் குடிவரவு அலுவலகத்தை இந்த மாதமே அமைக்க அனுமதி

கொழும்பு, ஏப். 03

குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்தை இந்த மாதமே யாழ்ப்பாண மாவட்டத்தில் நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற அமைச்சரவை முடிவுகளை

11

## இல்லங்களில் சேர்க்க அனுமதி கோரும் சிறுவர் எண்ணிக்கை வடக்கில் அதிகம்!

### வடமாகாண ஆளுநர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப். 03

வறுமை, பெற்றோர் மறுமணம் ஆகியவற்றால் சிறுவர் இல்லங்களில் சேர்ப்பதற்காக அனுமதி கோரும் சிறுவர்களின் எண்ணிக்கை வடக்கில் அதிகரித்துச் செல்வதாகவும், இது புதியதொரு சவாலாக மாறியுள்ளதாகவும் வடக்கு மாகாண ஆளுநர்

11



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்குப் பொறுப்புக்கூறும் ஆட்சிக்காக அணி திரள்வோம்!

## எதிர்க்கட்சித் தலைவர் அழைப்பு

கொழும்பு, ஏப். 03

ஆட்சியொன்றின் கீழ் மக்கள் ஊழல் இல்லாதவர்கள், மக்களுக்கு பொறுப்புக்கூறக்கூடியவர்கள், நேர்மையானவர்கள், அனைவரையும் உள்ளீர்க்க கூடியவர்கள், நீதி நியாயத்தோடு நடக்கக் கூடியவர்களை எதிர்பார்க்கிறார்கள். புதிதாக ஒன்றைச் செய்யும், நாட்டுக்கு நேர்மையையும், கூறுவதை செவிமெடுக்கும், மனித நேயம் மிக்கவர்களை எதிர்பார்க்கின்றனர். சலுகைகள் மற்றும் வரப்பிரசாதங்களை நிராகரித்து, எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும், திறம்பட்ட சேவையை ஆற்றுவோரை மக்கள் எதிர்பார்க்கின்றனர். இவ்வாறு மக்கள் எதிர்பார்க்கும் இதற்கு மிகவும் பொருத்தமான நபரை ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பு மாநகர சபைக்கு முன்னுறித்தியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மாளிகாவத்தையில் நேற்று நடந்த "மகிழ்ச்சியுடன் கூடிய கொழும்பு நகருக்கு" எனும் கொழும்பு மாநகர சபை மேயர் வேட்பாளர் வைத்திய கலாநிதி றுவைஸ் ஹனிபாவின் கொள்கை ஆவணத்தை வெளியிடும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஒரு குறிப்பிட்ட வர்த்தகக் குழுவின் மாதிரியாக நடந்து கொள்ளும் பொம்மை அரசியல்வாதிகளைக் கொண்ட அரசியல் இயக்கம் அல்ல. எனவே நாம் எமது பலவீனங்களை சரிசெய்து பலத்தோடு முன்னோக்கிப் பயணிப்போம். நாட்டு மக்கள் நம்பிக்கொண்டிருக்கும் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சம்பிரதாய மாநகர சபை சேவைக்கு அப்பால் சென்று முழு மக்களுக்கு பெறுமதி சேர்க்கும் சேவையை கொழும்பு நகருக்குப் பெற்றுத் தருவோம். சுகாதாரரம், கல்வி, வீட்டுக் வசதிகள், மற்றும் பொது வசதிகளை புதிய தொழில்நுட்பத்துடன் திறம்பட, வேகமான சேவையை பெற்றுத் தர நடவடிக்கை எடுப்போம். மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் ஆட்சியை கொண்டு வருவோம். தொழில்முயற்சியின் ஊடாக நகரை கட்டியெழுப்புவோம் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் கூறினார்.

ஊழல், மோசடி அல்லது திருட்டு இல்லாமல் எந்தவொரு குடிமகனும் கேள்வி கேட்கக் கூடிய, எந்தவொரு நபருக்கும் தகவல் அறியும் உரிமையை வழங்கும், குடிமக்கள் பங்கேற்பை அதிகரிக்கும், தூய்மையான ஆட்சியை முன்னெடுப்போம். மகிழ்ச்சி நிறைந்த நகரத்திற்காக அனைவரும் அணி திரள வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சுதந்திரத்தின் பின்னர் கொழும்பு குறித்து மக்களின் எதிர்பார்ப்புகளும் கனவுகளும் நனவாகும் சமூக உடன்படிக்கை வைத்திய கலாநிதி றுவைஸ் ஹனிபாவின் தலைமையில் இன்று முன்வைக்கப்படுகிறது. இதன் ஊடாக மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் உண்மையான மாற்றம் ஏற்படும் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார். (அ)

# முல்லைத்தீவில் தமிழரசு வேட்பாளர்கள் அறிமுகம்

முல்லைத்தீவு, ஏப். 03

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட முல்லைத்தீவு நகர் வட்டாரத்தில் போட்டியிடும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர்களுக்கான உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

இதில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்று பிரசாரத்தை முன்னெடுத்ததுடன், மக்களுக்கான துண்டுப் பிரசுரங்களையும் வழங்கினார். (அ)

# உலக சுகாதார நாளை ஒட்டிய ஒன்றுகூடல்



யாழ்ப்பாணம், ஏப். 03

உலகப்புகழ்பெற்ற சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை நிபுணர் பேராசிரியர் தவம் தம்பிப்பிள்ளை அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

உலக சுகாதார நாளை ஒட்டிய சிறப்பு ஒன்று கூடல் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்றுக் காலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்றது.

அமெரிக்க சான்போட் மருத்துவ கல்லூரியின் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை பேராசிரியரும் வைத்திய நிபுணருமாகிய தவம் தம்பிப்பிள்ளை கலந்து சிறப்பித்தார்.

ஆங்கில நெறி ஆசிரிய மாணவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வை ஆசிரிய மாணவி திருமதி. தர்மினி சம்பத்குமார் முன்னிலைப்படுத்தினார் .

டேவிட் லிஜானி அதிதி அறிமுக உரையை ஆற்றினார் .

தினேஸ் கௌசியா ஆரோக்கியமான வாழ்விற்கு கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் ஒழுக்கங்கள் என்ற பொருளில் உரை ஆற்றினார்.

ஆசிரிய மாணவி நிரோஜன் கௌசிகா தயாரித்த உலக சுகாதார நாளை ஒட்டிய விவரணப் படம் காட்சிப்படுத்தப்பட்டது.

பேராசிரியர் தவம் தம்பிப்பிள்ளை 2023 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் முதன் முதலில் தாய் ஒருவரின் சிறுநீரகத்தைப் பெற்று அவரது மகளுக்கு பொருத்தி சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சையை ஆரம்பித்து வைத்திருந்தார். இதனை கௌரவிக்கும் வகையிலும் கலாசாலைக்குரிய திறன் பலகை வகுப்பறை அமைவதற்கு உறுதுணை புரிந்த வகையிலும் கலாசாலை சமூகத்தினரால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். (அ)

# மியன்மார் மக்களுக்கு நிவாரணங்கள் வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, ஏப். 03

மியன்மாரில் இடம்பெற்ற நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக் கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மையில் மியன்மாரில் ஏற்பட்ட நில நடுக்கத்தின் காரணமாக மியன்மார் மக்கள் பெரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளதுடன், 2,700 பேர் வரை உயிரிழந்துள்ளதாக அறிய முடிகின்றது.

அத்துடன் அதிகளவானோர் காணாமல்போ யுள்ளதாகவும், மேலும் பலர் விபத்துக்களில் சிக்குண்டு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

பௌத்த நாடுகள் எனும் வகையில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் பேணிவரும் நீண்ட காலத் தொடர்புகளைக் கருத்தில் கொண்டு, மியன்மார் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவ தற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அதற்கமைய ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று நாட்டில் பௌத்த பிக்குமார்க ளால் சேகரிக்கப்படும் பொருட்கள் ரீதியான உதவிகளை விரைவாக மியன்மார் மக்களுக்கு கொண்டு சேர்ப்பதற்கான அரச தலையீடுகளின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. - என்றார். (அ)

# திருத்தப்பட்ட அஸ்வெசும திட்டம் பாராளுமன்றத்தின் அனுமதிக்கு!

கொழும்பு, ஏப். 03

திருத்தப்பட்ட அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு உத்தேச முறையை பாராளுமன்ற அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு முறையின் கீழ் தற்போது செலுத்தப்பட்டு வரும் நலன்புரி நன்மைகளின் பெறுமதியை அதிகரித்து குறித்த உத்தேச முறையைத் திருத்தம் செய்வதற்காக கடந்த மாதம் 17 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, திருத்தப்பட்ட அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு உத்தேச திட்டம் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த திருத்தப்பட்ட அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு உத்தேச முறையைப் பாராளுமன்ற அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது - என்றார். (அ)

# தட்டுப்பாடு இன்றி அரிசியை இறக்குமதி செய்ய அவதானம்

கொழும்பு, ஏப். 03

நுகர்வோருக்கு தட்டுப்பாடு இன்றி அரிசியை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு எதிர்காலத்தில் அரிசியை இறக்குமதி செய்ய பரிந்துரைத்துள்ளது.

விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்த மற்றும் வர்த்தக,வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தலைமையில் உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் 5 ஆவது தடவையாக கூடியது அதன் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அறுவடை இடம்பெற்று வருகின்றபோதிலும் சந்தையில் அரிசியின் விலை அதிகரித்து வருவதை காணக்கூடியதாக இருப்பதோடு, சந்தையில் குறிப்பிட்ட சில வகை அரிசிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி போதியளவு அரிசியை கையிருப்பில் வைத்திருக்கும் வகையில் அரிசியை இறக்குமதி செய்வது தொடர்பில் அமைச்சரவையின் கவனத்திற்கு கொண்டுவருவது குறித்து இதன்போது ஆராயப்பட்டது.

மேலும், இந்த ஆண்டில் அதிக மழை பெய்தமையால், இரண்டு முறை விளைச்சல்களுக்கு சேதம் ஏற்பட்டு, எதிர்பார்த்த அறுவடையில் கணிசமான அளவு குறைந்துள்ளதும் இங்கு குறிப்பிடப்பட்டது.

கால்நடை உணவுக்கு முறையற்ற விதத்தில் அரிசியைப் பயன்படுத்துவதே அரிசி தட்டுப்பாட்டுக்கு மற்றொரு முக்கிய காரணம் எனவும், கால்நடை உற்பத்தித் தொழிலில் கால்நடை உணவுத் தேவைக்காக உடைத்த அரிசியை இறக்குமதி செய்வது மற்றும் மாற்று உணவுகளை பயன்படுத்துவது குறித்தும் குழு கவனம் செலுத்தியது.

அதன்படி, உரிய நடைமுறைகளைப் பின்பற்றி தேவையான அளவு உடைந்த அரிசியை இறக்குமதி செய்ய விவசாய அமைச்சின் பணிப்பாளர் தலைமையிலான குழுவை அமைப்பதற்கும் உணவுப் பாதுகாப்புக் குழு அனுமதி வழங்கியது.

பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் கபில ஜனக பண்டார மற்றும் அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழு உறுப்பினர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈළනාඩු
03.04.2025 வியாழக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 20

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அனுகூல அரசியல் சத்துருக்கள்

இந்திய பிரதமர் நரேந்திர மோடி இரு நாள் பயணமாக, நாளை 4ஆம் திகதி, இலங்கை வரவுள்ளார். இதன்போது தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார். ஒரு காலத்தில் இந்திய எதிர்ப்பிற்கு பிரபலமான ஜே.வி.பி. ஆட்சியில் இருக்கின்ற நிலையில், இந்திய பிரதமர் ஒருவர், இலங்கை வருவதானது, ஒரு வரலாற்று நிகழ்வாகும். இந்தப் பின்புலத்தில், தேசிய இனப்பிரச்னை தொடர்பில் மோடி என்ன கூறுவார் என்பது அனைவருமே எதிர்பார்க்கும் ஒரு விடயமாகும் - அவர் எதனையும் கூறாமலும் செல்லலாம் அல்லது வழமைபோல் இந்தியாவின் நிலைப்பாடான அரசியலமைப்பின் 13வது திருத்தச்சட்டம் தொடர்பில் குறிப்பிடலாம்.

ஆனால் அநுரகுமார திஸநாயக்கவின் புதுடில்லி விஜயத்தின் போது, அவர் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் எதனையும் குறிப்பிட்டிருக்கவில்லை - அதற்கு மாறாக, அரசியலமைப்பை அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார். அதன் மூலம் மறைமுகமாக மாகாண சபை முறைமையை இயங்கு நிலையில் வைத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார். இந்த நிலையில் அவரைச் சந்திக்கும் தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் மாகாண சபை முறைமையின் அவசியத்தையும். தேர்தல் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்த வேண்டிய கடப்பாடுடையவர்கள்.

மாறாக சமஷ்டி பற்றிப் பேசினால் - அதனை தவறென்று மோடி கூறப் போவதில்லை ஆனால், தமிழ் கட்சிகளின் கருத்துக்களை செவிமடுத்துவிட்டு சாதாணரமாக சென்றுவிடுவார். ஆனால், தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்தாது விட்டால், 13ஆவது திருத்தச்சட்டத்தை தட்டிக் கழிக்க வேண்டும் என்று நினைக்கும் ராஜபக்ஷக்களும் அவர்களது ஆதரவு சக்திகளுமே நன்மையடைவர். மோடியின் இலங்கை விஜயம் இடம்பெறவுள்ள நிலையில் அரசாங்கம் 13வது திருத்தச்சட்டம் தொடர்பில் பேசக் கூடாது என்று ராஜபக்சவின் பொதுஜன பெரமுனவின் செயலாளர் காரியவசம் தெரிவித்திருக்கின்றார்.

இதுதான் அரசாங்கத்திற்கும் தேவையானது. ஏனெனில் தென்னிலங்கையில் தேவையற்ற சங்கடங்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக இப்போது இதனைப் பேசாமல் விடுவதுதான் சரியானது என்பதையே அரசாங்கமும் மறைமுகமாக சுட்டிக்காட்ட முற்படும். இந்த அடிப்படையில்தான், 13ஆவது திருத்தச்சட்டத்தை எதிர்ப்பதாகக் கூறிக்கொள்ளும் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் என்போர், மறைமுகமாக தென்னிலங்கையின் அடிப்படைவாத சக்திகளை பலப்படுத்தி வருகின்றனர் என்பதே உண்மை.

கடந்த பதினைந்து வருடங்களில் தமிழ் கட்சிகள் அரசியல் தீர்வு விடயத்தில் ஒரு சிறிய முன்னேற்றத்தைக் கூட காண்பிக்கவில்லை - இனியும் அவர்களால் காண்பிக்க முடியாது. ஏனெனில், அதற்கான வெளியக ஆதரவு இல்லை. இந்த நிலையில் பிரதமர் மோடி அரசியலமைப்பை அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருக்கும் நிலையில், மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டியதன் அவசியத்தையும், மாகாண சபைகள் முழுமையான அதிகாரத்துடன் இயங்க வேண்டியதன் அவசியத்தையுமே, தமிழ் கட்சிகள் முன்னிலைப்படுத்த வேண்டும்.

# மாகாண சபை தேர்தல் எப்போது என்பதை அரசு அறிவிக்கவேண்டும்!

## கேள்வி எழுப்புகிறது பொதுஜன பெரமுன

*கொழும்பு, ஏப். 03*

மாகாண சபை தேர்தல் இந்த ஆண்டு நடைபெறாது என்றால் எப்போது நடைபெறும் என்பதை அரசாங்கம் குறிப்பிட வேண்டும். பழைய தேர்தல் முறைமையின் பிரகாரம் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் முன்வைத்த தனிநபர் பிரேரணை குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்று சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திஸநாயக்க தெரிவித்தார்.

மாகாண சபை தேர்தல் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மாகாண சபை தேர்தல் காலவரையறையின்றி பிற்



போடப்பட்டுள்ளமைக்கு நல்லாட்சி அரசாங்கத்தின் அரச தலைவர்களும் தற்போதைய பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் பொறுப்புக் கூற வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வாகவே மாகாண சபைத் தேர்தல் முறைமை அறிமுகப் படுத்தப்பட்டது. நல்லாட்சி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை சட்டமுறைமை ஊடாக நெருக்கடிக்கு உள்ளாக்குவதற்கு எடுத்த நடவடிக்கைகளுக்கு எதிராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி செயல்படவில்லை. அப்போதைய எதிர்க்கட்சி தலைவராக பதவி வகித்த இரா. சம்பந்தன் இதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தவுடன் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக குறிப்பிட்டிருந்தது. தற்போது மாகாண சபைத் தேர்தலை இந்த ஆண்டு நடத்த முடியாது என்று அரசாங்கம் குறிப்பிடுகிறது. அப்படியாயின் மாகாண சபைத் தேர்தல் எப்போது நடக்கும் என்பதை குறிப்பிட வேண்டும்.

ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதியான மாகாண ஆளுநர் தலைமையில் மாகாணங்கள் நிர்வகிப்படுவது ஜனநாயகத்துக்கு விரோதமானது. ஆகவே மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் - என்றார். (ஐ)

# புதிய வாகனங்கள் பதிவின்போது ரி.ஐ.என். இலக்கம் கட்டாயமானது!

*கொழும்பு, ஏப். 02*

புதிய வாகனங்களை பதிவு செய்யும்போது உரிமையாளர்களின் ரி. ஐ. என். இலக்கத்தை சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள், உழவு இயந்திரம் மற்றும் முச்சக்கர வண்டி தவிர்ந்த ஏனைய அனைத்து புதிய மோட்டார் வாகனங்களுக்கும் இது பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வருமான வரி செலுத்துவதற்கு பதிவு செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்த வருமான வரி துறையினரால் வழங்கப்பட்ட ரி. ஐ. என். இலக்கத்தையும் அதனை உறுதிப்படுத்தும் முறையான சத்தியக்கடதாசியை சம்பந்தப்பட்ட உரிமையாளர் சமர்ப்பிக்க வேண்டும் என மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தெரிவித்தது. (ஐ)

# ஐ.தே.க. உபதலைவராக மீண்டும் அகில விராஜ்!

*கொழும்பு, ஏப். 03*

ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அகில விராஜ் காரியவசம் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.


ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முன்தினம் நடைபெற்ற



கட்சியின் செயல்குழு கூட்டத்தில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பில் கட்சியின் செயல்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அத்துடன், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைகள் உடைப்படும் நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பனிப்போர் வந்து நீங்கும். இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். மறைமுக பிரச்னைகள் வந்து விலகும். எதிலும் கவனம் தேவைப்படும் நாள்.

**கடகம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். சிறப்பான நாள்.

**சிம்மம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சகஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டி வரும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**தனுசு**
சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமைதருவார்கள்.

**மகரம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**கும்பம்**
நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் முடியும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மீனம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித்தருவார். நினைத்ததை முடிக்கும் நாள்.

# பாதுகாப்பு இல்லம் பற்றி யாழில் கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், ஏப். 03

மருதங்கேணியில் இயங்கி வருகின்ற பாதுகாப்பு இல்லம் தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பாதுகாப்பு இல்லத்தில் தங்கியுள்ளவர்களுக்கான உணவு வசதிகள், பாதுகாப்பு போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும், எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் பதில் அரசாங்க அதிபர் தலைமையில் ஆராயப்பட்டது.

இதில், பிரதம கணக்காளர், மருதங்கேணி பிரதேச செயலாளர், உதவி மாவட்டச் செயலாளர், மாவட்ட மற்றும் மருதங்கேணி பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், யாழ். சமூக செயல்பாட்டு மையத்தின் அலுவலகர்கள் உள்ளிட்ட தொடர்புடைய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (எ-05)

# வேட்பாளர் விண்ணப்பப் படிவத்தில் அடையாள அட்டை இலக்கம் இல்லை

வவுனியா, ஏப். 03

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட விண்ணப்பித்த வேட்பாளர் விண்ணப்பப் படிவத்தில் ஒருவருடைய அடையாள அட்டை இலக்கம் இல்லாத போதும், எவரையும் நிராகரிக்காது வவுனியா மாவட்ட தேர்தல்கள் செயலகம் குறித்த விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டுள்ளது.

வவுனியா மாநகர சபையில் போட்டியிட சுயேச்சை குழு ஒன்று வேட்பு மனுவை தாக்கல் செய்திருந்தது. அதில் நேரடி வேட்பாளராக 10 ஆம் வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளரது விவரங்கள் பதியப்பட்டுள்ளன. அந்த விண்ணப்பப் படிவத்தில் குறித்த வேட்பாளரது தேசிய அடையாள அட்டை இலக்கம் பதிவு செய்யப்படாது விண்ணப்பித்துள்ளனர்.

குறித்த விண்ணப்பங்களை மேற்பார்வை செய்த வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகர்களும், அதனை சரி என ஏற்றுக் கொண்டுள்ளனர். (எ-10)

# உதவி தெரிவத்தாட்சி அலுவலகர்களுடன் தேர்தல் குறித்து யாழில் கலந்துரையாடல்





யாழ்ப்பாணம், ஏப். 03

நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களுக்கு குழுக் கடமைகளுக்காக நியமிக்கப்பட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுடனான முன்னாயத்தக் கலந்துரையாடலானது யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த பதில் அரசாங்க அதிபர், "கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் கடமைகளில் குழுக்களின் செயல்பாடுகள் திறமையாகவும், சிறப்பாகவும் இருந்ததாகவும் அதற்காக ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் தமது நன்றிகளைத் தெரிவித்து, எமது மாவட்டத்துக்கு புதிதாக நியமனம் பெற்று வந்துள்ள தேர்தல்கள் ஆணையாளர் இ. சசீலனை வரவேற்பதாகவும், இடமாற்றம் பெற்றுச் சென்ற உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ. கி. அமல்ராஜ்ஜூக்கு அனைவரின் சார்பிலும் தமது நன்றியைத் தெரிவித்தார். உள்ளூராட்சித் தேர்தல் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெற அனைவரது ஒத்துழைப்பையும் நல்குமாறு கேட்டுக்கொண்டதுடன், நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலை விடவும் மென்மேலும் வினைத்திறனாக செயல்படுவது தொடர்பாக ஒவ்வொரு குழுக்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை முழுமையாக ஆராய்ந்து உரிய அறிவுறுத்தல்களை வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் தொடர்பில் வட்டாரங்களில் வாக்களிப்பு நிலையங்கள், வாக்கொண்ணுதல் முறைமைகள் போன்றவை தொடர்பாகவும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் இ. சசீலனால் விளக்கமளிக்கப்பட்டது.

இதில், மேலதிக அரசாங்க அதிபர் (காணி), பிரதம கணக்காளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பிரதம பொறியியலாளர், உதவி மாவட்டச் செயலாளர் உள்ளடங்கலாக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமிக்கப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (எ-05)

# "மாணிக்கவாசகரும் அச்சோப்பதிகமும்" திருவாசக சிறப்பு சொற்பொழிவு தொடர்

யாழ்ப்பாணம், ஏப். 03

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் - 51 பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளை 04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04. 00 மணிக்கு நடைபெறவுள்ளது. மாணிக்கவாசகர் சுவாமிகளின் குரு வணக்கத்தை தொடர்ந்து சைவப்புலவர் க. கைலநாதன் "மாணிக்கவாசகரும் அச்சோப்பதிகமும்" என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்றதிகாரம் ஒழிக்கப்பட்ட புதிய அரசமைப்பு நிச்சயம் வரும்!

## 5 வருடங்களில் சாத்தியம் என்கிறார் நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார

கொழும்பு, ஏப். 03

**"புதிய அரசமைப்பு இயற்றப்படுவதற்கான கால எல்லையை என்னால் சரியாகக் குறிப்பிட முடியாது. ஆனால், ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் இதற்குரிய பணி நிச்சயம் நிறைவேறும்", என்று நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்சன நாணயக்கார தெரிவித்துள்ளார்.**



தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு கூறினார்.

"எல்லா விடயங்களையும் ஆறு மாத காலத்துக்குள் செய்ய முடியாது. அதனால் தான் ஐந்தாண்டுகள் ஆணை வழங்கப்படுகிறது. புதிய அரசமைப்பை இயற்றுவதற்குரிய பணியை ஆரம்பத்தில் இருந்தே ஆரம்பிக்க வேண்டியதில்லை. நல்லாட்சி காலத்தில் தயாரிக்கப்பட்ட வரைவு நகல் உள்ளது. மேலும் பல அறிக்கைகளும் உள்ளன.

"கால எல்லை பற்றி கேட்டால் என்னால் பதில் வழங்க முடியாது. ஆனால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் உள்ளிட்ட புதிய அரசமைப்பு ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் கொண்டுவரப்படும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நிச்சயம் நீக்கப்படும். குறித்த முறைமையை தக்கவைப்பது தொடர்பில் எவ்வித பேச்சும் எமது தரப்பில் நடக்கவில்லை."- என்றும் அவர் கூறினார். (ஐ)

# நெடுந்தீவில் பிரசாரத்தை ஆரம்பித்தது தமிழ் அரசு!



யாழ்ப்பாணம், ஏப். 03

நெடுந்தீவு பிரதேச சபைக்கான தேர்தல் பரப்புரை பணிகளை நெடுந்தீவு ஐயனார் ஆலயத்தில் விசேட வழிபாடுகளுடன் சிவஞானம் சிறீதரன் நேற்றைய தினம் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் நெடுந்தீவு பிரதேச சபையில் உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தலில் போட்டியிடும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் வேட்பாளர்கள் கட்சியின் ஆதரவாளர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த காலத்தில் நெடுந்தீவு பிரதேச சபையில் உள்ளூராட்சி சபையை ஆண்ட கட்சிகள் மக்களுக்கான சேவைகளை சரிவரச் செய்யவில்லை.

கட்சிகளுக்கு இடையே இருந்த பிளவுகள் இந்த சபையை நாம் இழக்கக் காரணமாக கடந்த காலத்தில் இருந்தன.

இம்முறை நடைபெறும் பிரதேச சபை தேர்தலில் மக்கள் நெடுந்தீவின் அபிவிருத்தி மற்றும் மக்கள் பணிகளுக்காக இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என நான் கோரிக்கை விடுக்கின்றேன் - என்றார். (ஐ)

# உலக சுகாதார நாளை முன்னிட்டு ஆசிரியர் கலாசாலையில் ஒன்றுகூடல்!



யாழ்ப்பாணம், ஏப். 03

உலக சுகாதார நாளை முன்னிட்டு சிறப்பு ஒன்றுகூடல் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்று புதன்கிழமை அதன் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

அமெரிக்க சான்போட் மருத்துவ கல்லூரியின் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை பேராசிரியர் தவம் தம்பிப்பிள்ளை இதில் பங்கேற்றார்.

ஆங்கில நெறி ஆசிரிய மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந் நிகழ்வை ஆசிரிய மாணவி தர்மினி சம்பத்குமார் முன்னிலைப்படுத்தினார்.

டேவிட் லிஜானி அதிதி அறிமுக உரையை ஆற்றினார். தினேஷ் கௌசியா ஆரோக்கியமான வாழ்வுக்கு கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் ஒழுக்கங்கள் என்ற பொருளில் உரையாற்றினார்.

ஆசிரிய மாணவி நிரோஜன் கௌசிகா தயாரித்த உலக சுகாதார நாளை ஒட்டிய விவரண படம் காட்சிப்படுத்தப்பட்டது.

பேராசிரியர் தவம் தம்பிப்பிள்ளை 2023ஆம் ஆண்டு ஆரம்பத்தில் யாழ். போதனா மருத்துவமனையில் முதன்முதலில் தாய் ஒருவரின் சிறுநீரகத்தை பெற்று அவரின் மகளுக்கு பொருத்தி சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சையை ஆரம்பித்து வைத்திருந்தார்.

இதனை கௌரவிக்கும் வகையிலும் கலாசாலைக்குரிய திறன் பலகை வகுப்பறை அமைவதற்கு உறுதுணை புரிந்த வகையிலும் கலாசாலை சமூகத் தினரால் பாராட்டி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வாகன பதிவுக்கு ரி.ஐ.என். எண் கட்டாயமானது!

கொழும்பு, ஏப். 02

புதிய வாகனங்களை பதிவு செய்யும்போது உரிமையாளர்களின் ரி. ஐ. என். இலக்கத்தை சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள், உழவு இயந்திரம் மற்றும் முச்சக்கர வண்டி தவிர்ந்த ஏனைய அனைத்து புதிய மோட்டார் வாகனங்களுக்கும் இது பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வருமான வரி செலுத்துவதற்கு பதிவு செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்த வருமான வரி துறையினரால் வழங்கப்பட்ட ரி. ஐ. என். இலக்கத்தையும் அதனை உறுதிப்படுத்தும் முறையான சத்தியக்கடதாசியை சம்பந்தப்பட்ட உரிமையாளர் சமர்ப்பிக்க வேண்டும் என மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தெரிவித்தது. (ஐ)

# "வெள்ளியில் ஞாயிறு" திருப்பாடுகளின் நாடகம் 10ஆம் திகதி அரங்கேறுகிறது!

யாழ்ப்பாணம், ஏப். 03

திருமறை கலாமன்றத்தால் அரை நூற்றாண்டைக் கடந்து வரலாற்றுப் பாரம்பரியத்துடன் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக் காலத்தில் மேடையேற்றப்பட்டு வருகின்ற மாபெரும் அரங்க ஆற்றுகையான திருப்பாடுகளின் நாடகம் இவ்வாண்டு "வெள்ளியில் ஞாயிறு" என்னும் பெயரில் எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்களுக்கு மாலை 6.45 மணிக்கு இல.238 ,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்றம் தனது அனைத்து வளங்களையும் ஒருங்கிணைத்து பிரமாண்டமான படைப்பாக தயாரித்தளிக்கும் திருப்பாடுகளின் நாடகத்தை ஆண்டுதோறும் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டு வருகிறார்கள்.

திருப்பாடுகளின் நாடக மரபில் தனக்கென்றொரு தனித்துவத்தை தக்கவைத்திருக்கும் திருமறைக் கலாமன்றம் இவ்வாற்றுகையை காலத்திற்கேற்ற அரங்க நுட்பங்களை ,சிந்தனைகளை உள்வாங்கி புதிய புதிய பார்வைகளுடன் மேடையேற்றி வருகின்றது.இம்முறை மேடையேற்றப்படும் "வெள்ளியில் ஞாயிறு" திருப்பாடுகளின் நாடகம் முதன் முதலாக 2010 ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து 2018 ஆண்டிலும் மேடையேற்றப்பட்டது. தற்போது மூன்றாவது தடவையாக மேடையேற்றப்படுகின்றது.

திருமறை கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமாரின் எழுத்துரு, நெறியாள்கையில் இந்த ஆற்றுகை உருவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மாகாண சபை தேர்தல் எப்போது என்பதை அரசு அறிவிக்கவேண்டும்!

## கேள்வி எழுப்புகிறது பொதுஜன பெரமுன

கொழும்பு, ஏப். 03

மாகாண சபை தேர்தல் இந்த ஆண்டு நடைபெறாது என்றால் எப்போது நடைபெறும் என்பதை அரசாங்கம் குறிப்பிட வேண்டும். பழைய தேர்தல் முறைமையின் பிரகாரம் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் முன்வைத்த தனிநபர் பிரேரணை குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்று சிறீ லங்கா பொது ஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திஸநாயக்க தெரிவித்தார்.

மாகாண சபை தேர்தல் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,மாகாண சபை தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமைக்கு நல்லாட்சி அரசாங்கத்தின் அரச தலைவர்களும் தற்போதைய பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் பொறுப்புக் கூற வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வாகவே மாகாண சபைத் தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. நல்லாட்சி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை சட்டமுறைமை ஊடாக நெருக்கடிக்கு உள்ளாக்குவதற்கு எடுத்த நடவடிக்கைகளுக்கு எதிராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி செயல்படவில்லை. அப்போதைய எதிர்க்கட்சி தலைவராக பதவி வகித்த இரா. சம்பந்தன் இதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தவுடன் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக குறிப்பிட்டிருந்தது. தற்போது மாகாண சபைத் தேர்தலை இந்த ஆண்டு நடத்த முடியாது என்று அரசாங்கம் குறிப்பிடுகிறது. அப்படியாயின் மாகாண சபைத் தேர்தல் எப்போது நடக்கும் என்பதை குறிப்பிட வேண்டும்.ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதியான மாகாண ஆளுநர் தலைமையில் மாகாணங்கள் நிர்வகிப்படுவது ஜனநாயகத்துக்கு விரோதமானது-என்றார். (ஐ)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட ஒருவர் கைது!

வடமராட்சி, ஏப். 03

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பகுதியில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட ஒருவர் படகுடன் நேற்று புதன்கிழமை அதிகாலை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோத மீன்பிடியை கட்டுப்படுத்த கடற்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே அவர் கைது செய்யப்படுவார்.

ஒளிபாய்ச்சி மீன்பிடித்த குற்றச்சாட்டிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதான நபர் யாழ்ப்பாணம் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ -05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோயால் வருடாந்தம் 19 ஆயிரம் பேர் உயிரிழப்பு!

## - 33 ஆயிரம் புதிய நோயாளர் அடையாளம் -

கொழும்பு, ஏப். 03

நாட்டில் வருடாந்தம் 33 ஆயிரம் புதிய புற்றுநோய் நோயாளர்கள் சுகாதாரத் துறையால் அடையாளம் காணப்படுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் சுமார் 19 ஆயிரம் பேர் புற்று நோயால் உயிரிழக்கின்றனர் என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாட்டில் புற்றுநோய் பரவுவதை கட்டுப்படுத்தவும் தடுக்கவும் செயல்படுத்தப்பட்டுள்ள தேசிய கொள்கை மற்றும் மூலோபாய திட்டத்தை மீளாய்வு செய்வதற்காக உலக சுகாதார ஸ்தாபனத்தால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினர் மற்றும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவுடன் சந்தித்து பேசியபோதே அமைச்சர் இந்தத் தகவலை வெளிப்படுத்தினார்.



புற்றுநோய் பரவுவதை கட்டுப்படுத்தவும் தடுக்கவும் செயல்படுத்தப்பட வேண்டிய எதிர்கால திட்டங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

நாட்டில் புற்றுநோயை கட்டுப்படுத்த எடுக்கக்கூடிய அவசர நடவடிக்கைகள் குறித்து இந்தக் கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டது. மேலும் புற்றுநோய்கான மருந்துகள் மற்றும் பௌதிக வளங்களை மேம்படுத்துவது குறித்தும் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது சுகாதார அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு,

நாட்டின் சுகாதாரத் துறை எதிர்கொள்ளும் முக்கிய சவாலாக புற்றுநோய்க்கான சிகிச்சை சேவைகள் உள்ளன. புற்றுநோய் பரவலைக் கட்டுப்படுத்தவும் தடுக்கவும் அரசாங்கம் முன்னுரிமை அளித்து வருகிறது.

அதே நேரத்தில் தேசிய மற்றும் சர்வதேச ஆதரவையும் பெறு எதிர்பார்த்துள்ளது. தெரிவு செய்யப்பட்ட குழுவினருக்கான ஆரம்பிக்கப்பட்ட சுகாதார கல்வித் திட்டங்களை மேலும் வலுப்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

நாட்டில் வருடாந்தம் 33 ஆயிரம் புதிய புற்றுநோய் நோயாளர்கள் சுகாதாரத் துறையால் அடையாளம் காணப்படுகின்றனர். இவ்வாறு பதிவாகும் பெரும்பாலான புற்றுநோயாளர்கள் வாய் மற்றும் கழுத்து புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஆண்கள் என தரவுகள் சுட்டிக் காட்டுகின்றன. மேலும், மார்பக புற்றுநோய் பெண்களிடையே மரண வீதம் அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாக உள்ளது. அந்த வகையில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 19 ஆயிரம் பேர் புற்றுநோயால் உயிரிழக்கின்றனர் - என்றார். (ஐ)

# போசாக்கான உணவு வேலைத்திட்டம் ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 03

மக்களின் உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் குறைந்த விலையில் போசாக்கான உணவைப் பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் அரசாங்கம் அறிமுகப்படுத்திய வேலைத் திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள தேசிய உணவு ஊக்குவிப்புச் சபையின் "பெலெஸ்ஸ" உணவகத்திலேயே இந்தத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தேசிய உணவு ஊக்குவிப்பு சபை, சுகாதார அமைச்சு மற்றும் விவசாய அமைச்சு ஆகியன இணைந்து வர்த்தகர்களின் ஆதரவுடன் நடத்திவரும் இந்த உணவகத் திட்டம் தூய இலங்கை திட்டத்துடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதனால் 200 ரூபாய் என்ற குறைந்த விலையில் போசாக்கு நிறைந்த உணவை மக்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த போசாக்கான சமச்சீர் உணவின் செய்முறை அனைத்து அரச மற்றும் தனியார் உணவகங்களிலும் விரைவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. (ஐ)

# புத்தாண்டை முன்னிட்டு விசேட பேருந்து சேவை!

கொழும்பு, ஏப். 03

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சொந்த ஊர் திரும்பும் மக்களின் வசதி கருதி விசேட பேருந்து சேவையை இயக்கப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, மேலதிகமாக 500 பேருந்துகள இயக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். இந்தத் திட்டம் 2 கட்டங்களாக செயல்படுத்தப்படும். முதல் கட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை செயல்படுத்தப்படும்.

இரண்டாவது கட்டம், புத்தாண்டு நிறைவடைந்தது சொந்த இடங்களிலிருந்து மீண்டும் திரும்புவதற்காக எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என்றும் தெரி விக்கப்பட்டது.

# அரிசியை தொடர்ந்தும் இறக்குமதி செய்யவும்!

கொழும்பு, ஏப். 03

நுகர்வோருக்கு தட்டுப்பாடு இல்லாமல் அரிசியை வழங்கும் நோக்கில் எதிர்காலத்தில் அரிசியை இறக்குமதி செய்ய உணவு கொள்கை மற்றும் பாதுகாப்பு குழு பரிந்துரைத்துள்ளது.

அறுவடை நடந்து கொண்டிருந்தாலும், தற்போது சந்தையில் அரிசியின் விலையில் அதிகரிப்பு இருக்கிறது. சந்தையில் சில வகையான அரிசிகளுக்கு பற்றாக்குறை இருக்கிறது. இதன்படி, போதுமான அளவு அரிசி இருப்பை பேணுவதற்கு அரிசியை இறக்குமதி செய்வது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது.

உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்கான கொள்கை தீர்மானம் ஒன்றை எட்டுவதற்காக விவசாயம், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே. டி. லால்காந்த, வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தலைமையில் உணவுக் கொள்கை மற்றும் பாதுகாப்பு குழு கூடியபோதே இந்த முடிவு எடுக்கப்பபட்டது.

இதன்போது, மழையால் நெல் அறுவடை பாதிக்கப்பட்டமை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன், கால்நடை தீவனத்துக்கான அரிசி இறக்குமதி தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (ஐ)

# உழைக்கும்போது செலுத்தும் வரிகளில் திருத்தங்கள்

கொழும்பு, ஏப். 03

உழைக்கும் போது செலுத்த வேண்டிய வரி எல்லைகள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் திருத்தப்பட்டுள்ளன. இதற்கமைய மாதாந்த வரி அறவிடப்படாத எல்லை ஒரு இலட்சம் ரூபாயில் இருந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயை மாதாந்த சம்பளமாக பெற்ற ஒருவரிடம் 3,500 ரூபாய் உழைக்கும்போது செலுத்தும் வரியாக அறவிடப்பட்டிருந்தது.

புதிய திருத்தத்துக்கு அமைய அந்த வரி நீக்கப்பட்டுள்ளது.

2 இலட்சம் ரூபாய் சம்பளத்தை பெற்ற ஒருவர் இது வரை 10,500 ரூபாயை வரியாக செலுத்த வேண்டியிருந்தது டன் புதிய திருத்தத் துக்கு அமைய அந்த தொகை 3,000 ரூபாய் வரை குறைக்கப் பட்டுள்ளது.

இதற்கமைய 2 இலட்சம் ரூபாய் சம்பளத்தை பெறும் ஒருவருக்கு 7,500 ரூபாய் வரி நிவாரணம் கிடைக்கவுள்ளது. 3 இலட்சம் ரூபாய் சம்பளம் பெறும் ஒருவருக்கு 16,500 ரூபாய் வரி நிவாரணம் கிடைக்கவுள்ளது.

இதேவேளை, வைப்பீட்டாளருக்கு செலுத்த வேண்டிய வட்டி மீதான வரியும் குறைக்கப்பட்டுள்ளது.

18 வயதுக்கு குறைவான வர்களின் வைப்பீடுகளுக்கான வட்டி மீதான வரி தொடர்பில் நிவாரணத்தை கோர முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெளிநாடுகளுக்கு வழங்குகின்ற சேவைகள் மூலம் கிடைக்கும் வருமானத்துக்கு முதல் 15 வீத வரி அறவிடப்படவுள்ளது. (ஐ)

# தனியாரின் குறைந்த ஊதியம் ரூ. 27 ஆயிரமாக திருத்தப்படும்

## தொழில் அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஏப். 03

தனியார் துறை ஊழியர்களுக்கான குறைந்தபட்ச சம்பளத்தை 27 ஆயிரம் ரூபாயாக உயர்த்துவதற்கு சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக தொழில் அமைச்சு அறிவித்துள்ளது.

தற்போது குறைந்தபட்ச மாதாந்த சம்பளம் 21 ஆயிரம் ரூபாயாகக் காணப்படுகிறது.

இந்நிலையில், முன்மொழியப்பட்ட திருத்தங்கள் மே மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அமைச்சரவைக்கு பரிந்துரைக்கப்படும் என்று அமைச்சின் செயலாளர் எஸ்.எம். பியதிஸ்ஸ தெரிவித்தார்.

இந்த சம்பள உயர்வு இந்த வருட வரவு - செலவு திட்டத்துக்கானது மாத்திரமாகும்.



மேலும், அடுத்த வருடம் குறைந்தபட்ச மாதாந்த சம்பளத்தை 35 ஆயிரம் ரூபாய் வரை உயர்த்துவதற்கு எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பெரும்பாலான நகரங்களில் காற்றின் தரம் மிதமான நிலை

கொழும்பு, ஏப். 03

நாட்டின் பெரும்பாலான நகரங்களில் மிதமான நிலையில் காற்றின் தரம் காணப்படும் என கணிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் சுற்றாடல் கற்கைகள் மற்றும் சேவைகள் பிரிவு மற்றும் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் வாகன புகைப் பரீட்சை நம்பிக்கை நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் (நேற்று முன்தினம்) பெரும்பாலான நகரங்களில் காற்றின் தரம் மிதமான நிலையிலும், கண்டியில் சற்று ஆரோக்கியமற்ற நிலையிலும், மொனராகலையில் நல்ல நிலையிலும் காணப்பட்டது.

அதிகமாக போக்குவரத்து நெரிசல் காணப்படும் குறிப்பாக காலை 7.30 மணி முதல் 8.30 மணி வரை மற்றும் பகல் வேளைகளில் 1.00 மணி முதல் 2.00 மணி மணி வரை காற்றின் தரம் குறைவடைந்து காணப்படும் எனக் குறிப்பிடப்படுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் முதலமைச்சருக்கு 16 வருடங்கள் கடூழிய சிறை!

## அவரின் மைத்துனிக்கும் தண்டனை

கொழும்பு, ஏப். 03

**வட மத்திய மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் எஸ். எம். ரஞ்சித், அவரின் மைத்துனி சாந்தி சந்திரசேன ஆகியோருக்கு 16 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.**

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பான வழக்குகளிலேயே இவர்களுக்கு இந்தத் தண்டனையை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் விதித்தது.

2012 மற்றும் 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எஸ். எம் ரஞ்சித் சமரகோன் வட மத்திய மாகாணத்தின் முதலமைச்சராக செயல்பட்ட போது அவரின் தனிப்பட்ட செயலாளராக சாந்தி சந்திரசேன பணியாற்றினர்.

இதன்போது, முறையற்ற விதத்தில் இலாபமீட்ட இடமளித்தமை, எரிபொருள் கொடுப் பனவு சம்பளத்துடன் வழங் கப்பட்ட நிலையிலும் எரிபொருள் கொள்வனவு வவுச்சரின் ஊடாக 26 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான தொகையை பெற்றமை - அவ்வாறு வழங்குவதற்கு அரச அதிகாரிகளைத் தூண்டியமை உள்ளிட்ட குற்றங்களிலேயே அவர்களுக்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் குறிப்பிடக்கூடிய ஊழல் குற்றத்தை இழைத்தமைக்காக சந்தேகநபர்கள் இருவரையும் குற்றவாளிகளாக தீர்மானித்து கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி தண்டனையை அறிவித்துள்ளார். (ஐ)

# துப்பாக்கிச் சூட்டுக்கு உதவிய நபர் கைது!

கொழும்பு, ஏப். 03

துப்பாக்கிச்சூட்டு சம்பவம் ஒன்றுக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


காலி - அம்பலாங்கொடையில் கடந்த மார்ச் 14ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பிலேயே சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

எல்பிட்டி பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் காலி - மீட்டியாகொடை பிரதேசத்தில் வசிக்கும் 31 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

# ஜப்பானின் கப்பல்கள் கொழும்புக்கு வருகை

கொழும்பு, ஏப். 03



ஜப்பானிய கடல்சார் தற் காப்பு படையின் புங்கோ இடாஜிமா ஆகிய கப்பல்கள் நேற்றுமுன் தினம் செவ்வாய்க் கிழமை நல்லெண்ணப் பயணமாக கொழும்பு துறை முகத்தை வந்த டைந்துள்ளன.

கடற்படை சம்பிரதாயங்களுக்கமைய இந்த கப்பல்கள் இலங்கை கடற்படையினரால் வரவேற்கப்பட்டுள்ளன.

உராகா-கிளாஸ் மைன்ஸ்வீபர் டெண்டர் வகைக்கு சொந்தமான புங்கோ கப்பல் 141 மீற்றர் நீளமுடையது. 125 பணியாளர்களை கொண்டுள் ளது. கப்பலின் கட்டளை அதிகாரியாக கமாண்டர் டனாகா கோஜி பணியாற்றுகிறார்.

இதேவேளை, இடாஜிமா கப்பல் 65 மீற்றர் நீளம் கொண்டது.கப்பலின் கட்டளை அதிகாரியாக கமாண்டர் ஒடாடாகாயுகி பணியாற்றுகிறார். 54 பணியாளர்களை கொண்டதாகும்.இந்த கப்பல்கள் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் அதன் அங்கத்துவ குழுவினர்கள் கொழும்பு பிரதேசத்தில் சுற்றுலாத் தலங்களைப் பார்வையிடுவர். இந்தக் கப்பல்கள் நாளைய தினம் புறப்படவுள்ளன. (ஐ)

# சர்வதேச துணிச்சலான பெண் விருதை பெற்றார் நாமினி!



கொழும்பு, ஏப். 03

அமெரிக்க இராஜங்க திணைக்களம் வழங்கும் சர்வதேச துணிச்சலான பெண் விருதை இலங்கையின் ஊடகவியலாளர் நாமினி விஜயதாஸ வென்றுள்ளார்.

இந்த விருது வாஷிங்டனில் உள்ள அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தில் வைத்து அவருக்கு நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

விருது வழங்கும் நிகழ்வில் நாமினி விஜயதாஸவுக்கு அமெரிக்க இராஜாங்க செயலாளர் மார்கோ ரூபியோ மற்றும் அமெரிக்க முதல் பெண்மணி மெலனியா டிரம்ப் ஆகியோர் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

புலனாய்வு இதழியலுக்கு நாமினி ஆற்றும் பங்களிப்பையும் ஊழலை அம்பலப்படுத்துவதற்கான அவரின் அயராத முயற்சியையும் பாராட்டி இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டது. அத்துடன், நாமினி போர் காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் குரல் கொடுத்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கடற்கரையில் சடலம் மீட்பு!

கொழும்பு, ஏப். 03

கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கொழும்பு - மொறட்டுவை பகுதியிலேயே நேற்றைய தினம் இந்த சடலம் மீட்கப்பட்டது. இந்த சடலம் யாருடையது என அடையாளம் காணப்படவில்லை.

சடலம் பாணந்துறை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மொறட்டுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பதுளையில் மண்சரிவு

கொழும்பு, ஏப். 03

பதுளை, எல்ல - வெல்லவாய, கரந்தகொல்ல பகுதியில் நேற்று புதன்கிழமை ஏற்பட்ட மண்சரிவு காரணமாக அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, அந்த பகுதியால் பயணிக்கும் வாகன சாரதிகள் மற்றும் பொதுமக்கள் மிகவும் கவனமாகவும் விழிப்புடனும் இருக்குமாறு பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

# மனைவி போதைப்பொருளுடனும் கணவன் துப்பாக்கியுடனும் கைது

கொழும்பு, ஏப். 03

ஹோட்டலில் சுயநினைவின்றியிருந்த பெண்ணிடமிருந்து ஐஸ் போதைப்பொருளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இதைத் தொடர்ந்து அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் அவரின் கணவரை ரி-56 ரக துப்பாக்கியுடனும் அவற்றுக்கான 113 தோட்டாக்களுடனும் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கொழும்பு - வத்தளையில் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த பெண் ஒருவர் உயிரை மாய்த்துக்கொள்ள முயன்று சுயநினைவின்றி இருக்கிறார் என்று பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

இதையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், சந்தேக நபரான பெண்ணுக்கு முதலுதவி அளித்து அவரை விசாரணை செய்தனர். இதன் போது, சந்தேக நபரான பெண்ணிடமிருந்து 6 கிராம் 100 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளை கைப்பற்றினர்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப் பட்ட மேலதிக விசாரணைகளில், சந்தேக நபரான பெண் வெளிநாட்டில் உள்ள போதைப் பொருள் கடத்தல்காரர் ஒருவருடன் நெருங்கிய தொடர்புகளை பேணி வருகிறார் என்பது தெரியவந்துள்ளது.



இதைத் தொடர்ந்து பெண்ணுக்கு சொந்தமான ராகம பிரதேசத்தி லுள்ள வீட்டை பொலிஸார் சோதனையிட்டனர்.

இதன்போது, வீட்டிலிருந்த பெண்ணின் கணவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து ரி - 56 ரக துப்பாக்கி, அதற்கான 113 தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பணத்தால் மூண்டது சண்டை தம்பியை கொன்ற அண்ணன்!

கொழும்பு, ஏப். 03

பணம் தொடர்பில் எழுந்த தகராறில் தம்பியை கூரிய ஆயுதத்தால் குத்திக் கொன்ற அண்ணனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கம்பஹா - ஜா - எல பொலிஸ் பிரிவில் ஏக்கல, சாந்த மத்தியூ மாவத்தை பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், 24 வயது இளைஞரே உயிரிழந்தார். இதைத் தொடர்ந்து அவரின் மூத்த சகோதரனான 35 வயது நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இருவரும் ஒரே இடத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைதான

# குவாஷி நீதிமன்ற நீதிபதிக்கு ஒரு மாதம் கடுழியச் சிறை!

இறக்காமம், ஏப். 03

**இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இறக்காமம் குவாஷி நீதிமன்ற நீதிபதிக்கு ஒரு மாத காலம் கடுழியச் சிறைத்தண்டனை விதித்து அம்பாறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது.**

இறக்காமம் குவாஷி நீதிமன்ற நீதிபதியாக செயல்பட்டு வந்த சட்டத்தரணிக்கே இவ்வாறு ஒரு மாத காலம் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இறக்காமம் முஸ்லிம் விவகார குவாஷி நீதிமன்ற நீதிபதியான இவர், நீதிமன்ற சிறைக் கூடத்துக்குள் சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தரின் பொறுப்பிலிருந்த கைதியிடம் சில மாதங்களுக்கு முன்னர் பணம் பெற்ற குற்றச்சாட்டு தொடர்பில் நீதிவானின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

இதற்கமைய குறித்த விடயம் தொடர்பில் மேலதிக ஆலோசனை உரிய தரப்பினரிடம் பெறப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அவ்வழக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட வேளை சந்தேக நபரான குவாஷி நீதிமன்ற நீதிபதி தன் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்ட நிலையில் அம்பாறை நீதிமன்ற நீதிவானால் ஒரு மாத காலம் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

மேலும், இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட குவாஷி நீதிமன்ற நீதிபதி தொடர்பில் தாபரிப்பு செலவு, பிள்ளை செலவு, மோசடி, தகாத வார்த்தைப் பிரயோகம், நிகழ்நிலை பண மோசடி உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(எ-01)

# காணாமல் போன மீனவர் சடலமாக மீட்பு

கல்முனை, ஏப். 03

அம்பாறை - இறக்காமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெய்னாகாடு சாவாற்றில் கடந்த 31 ஆம் திகதி திங்கட்கிழமை மீன்பிடிக்கச் சென்றவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் சடலமாக மீட்கப்பட்டார்.

சடலமாக மீட்கப்பட்டவர் கல்முனை - பாண்டிருப்பைச் சேர்ந்த செல்வராசா என்று உறவினர்கள் அடையாளம் காட்டினர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, நெய்னாகாடு சாவாறு பகுதியில் நண்பருடன் திங்கட்கிழமை மாலை வேளையில் மீன்பிடிக்கச் சென்றவர் வீடு திரும்பவில்லை.

இந்த நிலையில், தனது கணவரைக் காணவில்லை என மனைவி செவ்வாய்க்கிழமை காலை இறக்காமம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த முறைப்பாட்டுக்கு அமைய குறித்த மீனவரின் நண்பரிடம் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து செவ்வாய்க்கிழமை பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது, காணாமல் போனவர் பிற்பகல் 03.00 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக அம்பாறை பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

மேலதிக விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# பழுதடைந்த பழங்கள் விற்பனை அதிகரிப்பு

கல்முனை, ஏப். 03

பழுதடைந்த பழங்கள் விற்பனை காரணமாக நுகர்வோர் பாதிக்கப்பட்டு வருவதாக குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு, கல்முனை தெற்கு, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், சம்மாந்துறை ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் பழங்கள் விற்பனை செய்யும் நிலையங்களில் இவ்வாறு பழுதடைந்த பழங்கள் வகைகள் விற்பனை அதிகரித்து வருகின்றன.

குறிப்பாக வெள்ளரிப்பழம், வாழைப்பழம், மாம்பழம், திராட்சை, கொய்யாப்பழம், பலாப்பழம் பப்பாசி, மாதுளம் பழம் உள்ளிட்டவை பழுதடைந்த நிலையிலும் பங்கஸ் தொற்று ஏற்பட்ட நிலையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதனால், நுகர்வோர்கள் சுகாதார ரீதியாக பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொள்வதாக குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கடந்த காலங்களில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸதீன் ஆலோசனைக்கமைய மேற்படி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் திடீர் களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும், முறையற்ற வகையில் உணவு தயாரிக்கும் நிறுவனங்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் திடீர் களப் பரிசோதனையின் போது ஹோட்டல்கள் உணவகம், மரக்கறி விற்பனை நிலையங்கள் மற்றும் பழக்கடைகள் போன்றனவும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

ஆனால், தற்போது மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்களின் திடீர் பரிசோதனை தொய்வின் காரணமாக இவ்வாறு பழுதடைந்த பழங்கள் விற்பனை அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்தனர்.

(எ- 01)

# பயங்கரவாத தடைச்சட்டம் பிக்குகளின் மீதும் பாயுமா?

இம்ரான் எம்.பி. கேள்வி!

கிண்ணியா, ஏப். 03

ருஸ்தி மேல் பாயும் பயங்கரவாத தடைச் சட்டம் அடிப்படைவாத பிக்குகளின் மீதும் பாயுமா? என்று திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கேள்வி எழுப்பினார்.

கிண்ணியாவில் கடந்த 31 ஆம் திகதி இடம்பெற்ற பலஸ்தீன ஆதரவு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

ருஸ்தியின் கைதுக்கு பின்னால் பெரும் அரசியல் நிகழ்ச்சி நிரல் ஒன்றுள்ளதாகவே நினைக்கிறேன். ஸ்டிக்கர் ஒட்டியதுக்கு பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட நிகழ்வு, கவிதை எழுதிய முஸ்லிம் இளைஞன் கோட்டாபய அரசால் பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட நிகழ்வையே நினைவு கூறுகிறது.

தற்போது இடம்பெற்ற இந்தக் கைதுக்கு பொலிஸாரால் சொல்லப்பட்ட காரணத்தை பார்க்கும்போது அவர்கள் ருஸ்தியை குற்றவாளியாக்க காரணத்தை தேடுவதாகவே உணர்கிறேன்.

பொலிஸாரின் கூற்றுப்படி அவர் அடிப்படைவாத கருத்துக்களை கொண்டிருப்பின் ஸ்டிக்கர் ஒட்டும்வரை அவர் ஓர் அடிப்படைவாதி என அவர்களுக்குத் தெரியாது.

இலங்கையில் ருஸ்தி மட்டும் தானா அடிப்படைவாத கருத்துக்களை கொண்டிருக்கிறார். ஒவ்வொரு சமூகத்திலும் தாம் சார்ந்த சமூகத்தின் அடிப்படைவாத கருத்துக்களை கொண்டபலர் உள்ளனர். அவ்வாறு எனில் அவர்கள் அனைவரையும் கைது செய்ய முடியுமா? அடிப்படைவாதக் கருத்துக்களை வெளிப்படையாகக் கூறும் பிக்குகளின் மீது இந்த சட்டம் பாயுமா? என்ற கேள்விகளையும் தொடுத்தார்.

ஒய்வுபெற்ற இஸ்ரேல் படையினரின் கொத்தனியாக இலங்கை மாறிவருவதை நாம் பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளோம். அவர்களின் வணக்கஸ்தலங்கள் நிறுவப்படுவதையும் அவர்களின் ஆக்கிரமிப்பு செயல்பாடுகளையும் கூறியுள்ளோம். அதற்கான நடவடிக்கை ஒன்றையும் அநுர அரசு மேற்கொள்ளவில்லை. அது ஏன் என்பது இந்தக் கைது மூலமாக தெளிவாகிறது.

இஸ்ரேலுக்கு எதிராக ஒரு ஸ்டிக்கர் ஒட்டியதுக்கே பயங்கரவாத தடைச் சட்டம் எனில் இந்த அரசு இஸ்ரேலின் பாதுகாவலனாகவே செயல்படுகிறது என்பது தெளிவாகிறது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவோம், இன மத பேதமற்ற அரசு என்ற கோஷங்களுடன் ஆட்சிக்கு வந்த இந்த அரசு தற்போது அதே பயங்கரவாத தடைச் சட்டத்தையே இராஜபக்ஷக்களை விட மோசமாக பயன்படுத்த ஆரம்பித்திருக்கிறது.

இந்த இரட்டை வேடத்துக்கு விரைவில் மக்கள் பதில் வழங்குவார்கள். ருஸ்தியின் விடுதலைக்காக நாம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம் என்றும் அவர் தெரிவித்தார். (எ)

# இலக்கிய விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

காரைதீவு, ஏப். 03

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யும் அரச இலக்கிய விருது வழங்கல் தொடர்பில் இலங்கை எழுத்தாளர்களுக்கும் மற்றும் நூல் வெளியீட்டாளர்களுக்கும் விசேட அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு அரச இலக்கிய விருது வழங்கும் வைபவத்தின் பொருட்டு 2024 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நூல்களை மதிப்பீடு செய்யும் போது முறையாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் முதல் பதிப்பாக வெளியிடப்பட்டதும் 49 பக்கங்களுக்கு குறையாததுமான அச்சிடப்பட்ட நூலின் மூன்று பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

சமர்ப்பிக்கப்பட வேண்டிய நூல்களை 'அரச இலக்கிய ஆலோசனைக் குழு, கலாசார அலுவல்கள் திணைக்களம், 8ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கிடைக்கச் செய்யலாம்.

நூல்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினம் ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதியாகும்.

(எ- 07)

# யானை தாக்கியதில் குடும்பப் பெண் பலி

மட்டக்களப்பில் துயரச் சம்பவம்

மட்டக்களப்பு, ஏப்.03

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள தாந்தாமலை பகுதியில் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை காட்டு யானை தாக்கியதில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

தாந்தாமலை, ரெட்பானா கிராமத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயான மாமாங்கம் சந்திரா (வயது- 58) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

தனது வீட்டு வளவினுள் நுழைந்த யானைகளைக் கண்டு குறித்த பெண் உயிர் தப்புவதற்காக ஓடிய போது காட்டு யானை மறித்து தாக்கியதில் அவர் உயிரிழந்தார் என தெரிய வருகின்றது.

பட்டிப்பளை திடீர் மரண விசாரணை அதிகாரி டினேஸ்வரன் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு, சடலத்தை பிரேத பரிசோதனை செய்ய பணித்தார்.

பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியன்மாரில் நிலநடுக்கத்தால் இதுவரை 3000 பேர் உயிரிழப்பு!



நேபிடாவ், ஏப். 03

**மியன்மாரில் அடுத்தடுத்து ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3000 ஆக அதிகரித்துள்ளது.**

மியன்மார் மற்றும் தாய்லாந்து நாடுகளில் 28 ஆம் திகதி கடந்த வெள்ளிக்கிழமை நண்பகலில் 7.7 ரிக்டர் அளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. மியன்மாரின் 2ஆவது பெரிய நகரமாக விளங்கும் மண்டலே நகரில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.


பல அடுக்குமாடி குடியிருப்புகள் இடிந்து விழுந்தன. ஏராளமானவர்கள் இடிபாடுகளுக்குள் புதைந்தனர். வீதிகள், பாலங்கள் சேதமடைந்து போக்குவரத்து முடங்கியது. நாட்டின் முக்கிய அணை, பழமையான அரண்மனை, விமான நிலையங்களும் சேதமடைந்தன. முதல் நாளில் 150இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்ததாக கூறப்பட்ட நிலையில் மறுநாள் பலி எண்ணிக்கை 1600 ஐ கடந்தது.

இந்த நிலநடுக்கத்தின் தாக்கம் தாய்லாந்திலும் எதிரொலித்தது. தலைநகர் பாங்கொக்கில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பு இடிந்து விழுந்ததில் 17 பேர் மறுநாள் சடலமாக மீட்கப்பட்டனர். நேற்று முன்தினம் பலி எண்ணிக்கை 2500 ஐ கடந்த நிலையில் நேற்று 3 ஆயிரத்தை எட்டியது.

மியன்மாரில் இராணுவ ஆட்சியால் மக்கள் திண்டாடி வந்த நிலையில், நிலநடுக்கமும் அவர்களை உலுக்கியதால், உலக நாடுகள் மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை அறிவித்தன. இந்தியா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் மீட்புக் குழுவினரையும், நிவாரணப் பொருட்களையும் அனுப்பி வைத்தன.

மேலும், கட்டட இடிபாடுகளில் சிக்கி இதுவரை 4,500 பேர் காயமடைந்துள்ளதாகவும், இடிபாடுகளில் சிக்கி உள்ளவர்களை மீட்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக வும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழலில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 04.31 மணியளவில் ரிக்டர் அளவுகோலில் 4.7 ஆக மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் மியன்மார் மக்கள் பீதியில் உறைந்துள்ளனர்.(எ)



# ஐஸ்லாந்தில் எரிமலை வெடிப்பு; மக்கள் வெளியேற்றப்பட்டனர்

ரையாக்விக், ஏப். 03

ஐஸ்லாந்தில் எரிமலை வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள், சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

வடக்கு அட்லாண்டிக்கில் அமைந்துள்ள தீவு நாடு ஐஸ்லாந்து. 4 இலட்சம் பேரை மொத்த மக்கள் தொகையாக கொண்ட ஐஸ்லாந்தில் 33 எரிமலைகள் உயிர்ப்புடன் உள்ளன.

இந்த நிலையில், அந்த நாட்டின் தலைநகரின் தெற்கே ரையாக்ஜென் தீபகற்பத்தில் உள்ள எரிமலையில் நேற்று வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக லாவா வெளியேறி அப்பகுதியில் கரும்புகை சூழ்ந்துள்ளது.

எரிமலை வெடிப்பு காரணமாக அப்பகுதியில் வசித்து வந்த பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர். இந்த எரிமலை வெடிப்பால் உயிரிழப்பு சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சீனா - இந்தியா நெருக்கமாக இணைந்து செயல்பட வேண்டும்

## சீன ஜனாதிபதி ஜின்பிங் விருப்பம்

பீஜிங், ஏப். 03

சீனாவும் இந்தியாவும் இன்னும் நெருக்கமாக இணைந்து செயல்பட வேண்டும் என்று இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்முவிடம் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் விருப்பம் தெரிவித்தார்.

இந்தியாவும் சீனாவும் தங்களுக்கு இடையில் இராஜதந்திர உறவுகளை கடந்த 1950ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி ஏற்படுத்திக் கொண்டன. இதன் 75ஆம் ஆண்டு தினத்தை முன்னிட்டு இந்திய ஜனாதிபதியும் சீன ஜனாதிபதியும் நேற்று முன்தினம் வாழ்த்துகளை பரிமாறிக் கொண்டனர்.

அப்போது, திரவுபதி முர்முவிடம், “சீனாவும் இந்தியாவும் இன்னும் நெருக்கமாக இணைந்து செயல்பட வேண்டும். இந்த உறவுகள் டிராகன் - யானை (இரு நாடுகளின் அடையாள விலங்குகள்) நடன வடிவத்தை எடுக்க வேண்டும்.

அண்டை நாடுகளான சீனாவும் இந்தியாவும் அமைதியாக இணைந்து வாழ்வதற்கான வழிகளை கண்டறிய வேண்டும். முக்கிய சர்வதேச விவகாரங்களில் தகவல்தொடர்பு மற்றும் ஒருங்கிணைப்பை மேம்படுத்தவும் எல்லைப் பகுதிகளில் கூட்டாக செயல்பட்டு அமைதியை பாதுகாக்கவும் நான் தயாராக இருக்கிறேன்” என்று ஜின்பிங் கூறினார்.

கடந்த 2020ஆம் ஆண்டு கிழக்கு லடாக்கில் ஏற்பட்ட இந்திய - சீன இராணுவத்தினர் மோதலை தொடர்ந்து எல்லையில் பதற்றம் நிலவியது. கடந்த ஆண்டு ஒக்ரோபரில் கிழக்கு லடாக்கின் தேப்சாங், டெம்சோக் பகுதிகளில் இந்தியாவும் சீனாவும் படைகளை குறைத்துக் கொண்டதை தொடந்து அங்கு பதற்றம் முடிவுக்கு வந்தது. இந்த நிலையில் இரு நாட்டு தலைவர்களும் வாழ்த்துகளை பரிமாறிக் கொண்டுள்ளனர். (எ)

# இந்திய விவசாய பொருட்கள்மீது அமெரிக்கா 100 வீதம் வரி விதிப்பு

## ஜனாதிபதி ட்ரம்ப் தீவிர ஆலோசனை

நியூயோர்க், ஏப். 03

இந்தியாவின் விவசாய பொருட்கள் மீது 100 சதவீதம் வரை வரி விதிப்பது குறித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார்.

ட்ரம்ப் நிர்வாகம் நேற்று முதல் பரஸ்பர வரி விதிப்பை அமுல்படுத்தவுள்ளதாக அறிவித்துள்ளது. இதன் ஒரு பகுதியாக, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் விவசாய பொருட்களின் மீதும் 100 சதவீத வரிகளை விதிக்க ட்ரம்ப் திட்டமிட்டுள்ளதாக வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுகுறித்து நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கரோலின் லீவிட் தெரிவிக்கையில், “உலக நாடுகள் அமெரிக்க பொருட்களுக்கு அதிக வரிகளை விதிப்பதால் நமது ஏற்றுமதியாளர்கள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகின்றனர். குறிப்பாக இந்தியா, அமெரிக்க வேளாண் பொருட்களுக்கு 100 சதவீத வரியை விதிக்கிறது. அதே போன்று, பால் உற்பத்தி பொருட்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் 50வீதமும், ஜப்பான் 70 வீதமும் வரிகளை விதிக்கிறது. வெண்ணெய் மற்றும் சீஸ் மீது கனடா சுமார் 30 வீதம் வரியை விதிக்கிறது. இதுபோன்ற நாடுகளால், அமெரிக்கா நீண்ட காலமாக கடும் சுரண்டலுக்கு ஆளாகியுள்ளது.

இந்த நிலையில், ஜனாதிபதி ட்ரம்ப் எடுத்த துணிச்சலான முடிவுகள் அமெரிக்காவுக்கு ஒரு வரலாற்று சிறப்பு மிக்க மாற்றத்தை ஏற்படுத்தவுள்ளது. நமது ஏற்றுமதிக்கு அந்த நாடுகள் விதிக்கும் அளவுக்கு பரஸ்பர வரி விதிப்பை அமுல்படுத்தும் நேரம் வந்துவிட்டது. விடுதலை தினத்தை முன்னிட்டு நாளை (நேற்று) புதன்கிழமை முதல் இந்த பரஸ்பர வரி விதிப்பு திட்டம் அமுலுக்கு வருகிறது”- என்றார்.

இதனிடையே செய்தியாளர்களைச் சந்தித்த ட்ரம்ப், “அமெரிக்க பொருட்களுக்கு கணிசமான வரிகளை குறைக்க இந்தியா திட்டமிட்டுள்ளது எனது கவனத்துக்கு வந்துள்ளது. அவர்கள் ஏன் இதை நீண்ட காலத்துக்கு முன்பே செய்யவில்லை என்பதே எனது கேள்வி”-என்றார். (எ)

# மாவோயிஸ்ட் தீவிரவாதம் 2026இல் வேரறுக்கப்படும்

## மத்திய அமைச்சர் அமித் ஷா உறுதி

புதுடில்லி, ஏப். 03

எதிர்வரும் 2026ஆம் ஆண்டில் மாவோயிஸ்ட் தீவிரவாதம் வேரறுக்கப்படும் என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் சத்தீஸ்கர், ஒடிசா, ஜார்க்கண்ட், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, ஆந்திரா, தெலங்கானா, மேற்குவங்கம் உள்ளிட்ட மாநிலங்களின் குறிப்பிட்ட மாவட்டங்களில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் ஆதிக்கம் இருந்தது. கடந்த 2015ஆம் ஆண்டு புள்ளிவிவரங்களின்படி இந்த மாநிலங்களைச் சேர்ந்த 35 மாவட்டங்களில் மாவோயிஸ்ட் தீவிரவாத பிரச்னை நீடித்தது.

இந்தச் சூழலில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா சமூக வலைத்தளத்தில் நேற்று முன்தினம் வெளியிட்ட பதிவில், “மாவோயிஸ்ட் தீவிரவாதம் இல்லாத இந்தியாவை உருவாக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்த இலட்சியத்தில் முக்கிய மைல் கல்லை எட்டியுள்ளோம், தற்போதைய நிலவரப்படி மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் ஆதிக்கம் நிறைந்த மாவட்டங்களின் எண்ணிக்கை 12இல் இருந்து 6 ஆக குறைந்திருக்கிறது. எதிர்வரும் 2026ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதிக்குள் இந்தியாவிலிருந்து மாவோயிஸ்ட் தீவிரவாதம் வேரறுக்கப்படும்”- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# அரசியல் எனக்கு முழுநேர பணியல்ல

## யோகி ஆதித்யநாத்

லக்னோ, ஏப். 03

அரசியல் என்பது தனக்கு முழுநேர பணியல்ல என்றும் உண்மையில் தான் ஒரு துறவி என்றும் இந்தியாவின் உத்தர பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

பா.ஜ.கவைச் சேர்ந்த 75 வயதுக்கு மேற்பட்டவர்கள் மத்திய, மாநில அரசுகளில் அமைச்சர் பதவியில் இருப்பதில்லை என்பது எழுதப்படாத விதியாக உள்ளது. அந்த வகையில், பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் செப்ரெம்பர் 17ஆம் திகதி 76ஆவது வயதில் அடியெடுத்து வைக்கவுள்ளார். எனவே, நரேந்திர மோடி விரைவில் பிரதமர் பதவியிலிருந்து விலகுவார் என தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து யோகி ஆதித்யநாத்திடம் கேள்வி எழுப்பிய போது, “நான் இப்போது உத்தர பிரதேச முதல்வராக உள்ளேன். மாநில மக்கள் நலன் கருதி பா.ஜ.க. எனக்கு இந்தப் பொறுப்பை வழங்கியது. அரசியல் என்பது எனக்கு முழுநேரப் பணி அல்ல. இப்போது முதல்வராக பணியாற்றுகிறேன். ஆனால், உண்மையில் நான் ஒரு துறவி. அரசியல் என்பது என்னுடைய நிரந்தர தொழில் அல்ல. தர்மம் பாதுகாப்பாக இருந்தால் அது மக்கள் நலனுக்கு வழிவகுக்கும்”- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பென் சியர்ஸ் அபார பந்துவீச்சு நியூசிலாந்து அசத்தல் வெற்றி

## ஒருநாள் தொடரை இழந்தது பாகிஸ்தான்

ஹாமில்டன், ஏப். 03

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அசத்தல் வெற்றி பெற்றது. அந்த அணி தரப்பில் அபாரமாக பந்துவீசிய பென் சியர்ஸ் 5 விக்கெட் வீழ்த்தினார்.


பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 ரி - 20, 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில், முதலில் நடைபெற்ற ரி - 20 தொடரை 4-1 என்ற கணக்கில் நியூசிலாந்து கைப்பற்றியது. இதையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான ஒருநாள் தொடரில் முதல் போட்டி முடிந்த நிலையில் 1-0 என்று நியூசிலாந்து முன்னிலை வகித்தது.

இந்த நிலையில், இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி ஹாமில்டனில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 50 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 292 ஓட்டங்கள் எடுத்தது.

நியூசிலாந்து தரப்பில் அதிகபட்சமாக மிட்செல் ஹே 99 ஓட்டங்கள் எடுத்தார். பாகிஸ்தான் தரப்பில் முகமது வாசிம் ஜூனியர், சுபியான் முஹீம் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர். இதையடுத்து 293 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் கண்ட பாகிஸ்தான் அணி, நியூசிலாந்தின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தது.

இதில் அப்துல்லா ஷபீக் 1, இமாம் உல் ஹக் 3, பாபர் அஸாம் 1, முகமது ரிஸ்வான் 5, சல்மான் ஆஹா 9, தையர் தாஹிர் 13, முகமது வாசிம் ஜூனியர் 1, ஹாரிஸ் ரவூப் 3, ஆகிப் ஜாவத் 8 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். தொடர்ந்து பஹீப் அஷ்ரப் மற்றும் நசீம் ஷா ஜோடி சேர்ந்தனர். இருவரும் நிதானமாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்தனர்.

இருவரும் அரைச்சதம் அடித்து அசத்தினர். இதில்



நசீம் ஷா 51 ஓட்டங்களிலும், பஹீம் அஷ்ரப் 73 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இறுதியில் பாகிஸ்தான் 41.2 ஓவரில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 208 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. இதன் மூலம் 84 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அபார வெற்றி பெற்றது.

நியூசிலாந்து தரப்பில் அபாரமாக பந்துவீசிய பென் சியர்ஸ் 5 விக்கெட்கள் வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-0 என்ற கணக்கில் நியூசிலாந்து கைப்பற்றியது. இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி வரும் 5ஆம் திகதி நடைபெறுகிறது. (எ)



# 8 விக்கெட்களால் பஞ்சாப் வெற்றி

லக்னோ, ஏப். 03

லக்னோவுக்கு எதிரான போட்டியில் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் அணி அபார வெற்றி பெற்றது.

10 அணிகள் இடையிலான 18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் இதுவரை 12 லீக் ஆட்டங்கள் முடிந்துள்ளன.

இந்தச் சூழலில், லக்னோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற 13ஆவது லீக் போட்டியில் ரிஷப் பண்ட் தலைமையிலான லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணி, ஸ்ரேயஸ் ஐயர் தலைமையிலான பஞ்சாப் கிங்ஸை எதிர்கொண்டது. இதில், லக்னோ அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

முடிவில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் லக்னோ அணி 7 விக்கெட்களை இழந்து 171 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியின் சார்பில் அதிகபட்சமாக நிக்கோலஸ் பூரன் 44 ஓட்டங்களும், ஆயுஷ் பதோனி 41 ஓட்டங்களும் எடுத்தனர். பஞ்சாப் அணியின் சார்பில் அதிகபட்சமாக அர்ஷ்தீப் சிங் 3 விக்கெட்களை வீழ்த்தி அசத்தினார்.

இதனைத்தொடர்ந்து 172 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பஞ்சாப் அணி துடுப்பெடுத்தாட தொடங்கியது. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பஞ்சாப் அணி 16.2 ஓவர்களில் 2 விக்கெட்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கை எட்டியது. (எ)



# லக்னோ வீரருக்கு அபராதம் விதிப்பு

லக்னோ, ஏப். 03

விக்கெட் வீழ்த்திய பின்னர் வித்தியாசமான முறையில் கொண்டாடிய லக்னோ வீரருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். தொடரில் லக்னோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் - லக்னோ அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் பஞ்சாப் அணி துடுப்பெடுத்தாடிய போது ப்ரியன்ஷ் ஆர்யாவின் விக்கெட்டை லக்னோவின் திக்வேஷ் ராதி கைப்பற்றினார். ப்ரியன்ஷ் ஆர்யா ஆட்டமிழந்து, பெவிலியன் திரும்பியபோது, நோட்புக் செலிபிரேஷன் எனப்படும், வித்தியாசமான கொண்டாட்டத்தை திக்வேஷ் ராதி செய்தார்.

அதாவது, ஆட்டமிழந்து செல்லும் வீரருக்கு நெருக்கமாக சென்று, கையில் எழுதுவதுபோல்தான் அந்த கொண்டாட்டம் இருக்கும். அந்த கொண்டாட்டம் முடிந்த பிறகு, திக்வேஷை அழைத்து நடுவர் எச்சரிக்கை விடுத்தார். இதேபோல், இனி செய்யக் கூடாது என நடுவர் எச்சரிக்கை விடுத்து அனுப்பினார்.

இந்த நிலையில், விக்கெட் வீழ்த்திய பின்னர் வித்தியாசமான கொண்டாட்டத்தில் ஈடுபட்ட திக்வேஷ் ராதி ஐ.பி.எல். விதிமுறைகளை மீறியதாகக் கூறி அவருக்கு போட்டி கட்டணத்தில் 25 சதவீதம் அபராதம் விதித்து ஐ.பி.எல். நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. மேலும், ஒரு தகுதி இழப்பு புள்ளியும் அவருக்கு விதிக்கப்பட்டுள்ளது.


# "நிகழ்காலத்தில் இருக்க முயற்சி செய்கின்றேன்"

லக்னோ, ஏப்.03

நான் எப்போதும் நிகழ்காலத்தில் இருக்க முயற்சி செய்கின்றேன் - என்று ஸ்ரேயஸ் ஐயர் தெரிவித்தார்.

ஐ.பி.எல். தொடரில் லக்னோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் - லக்னோ அணிகள் மோதின. இதில், 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் அணி அபார வெற்றி பெற்றது.

இந்த நிலையில், இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்ற பின்னர் பஞ்சாப் கிங்ஸ் அணியின் தலைவர் ஸ்ரேயஸ் ஐயர் கூறுகையில், "இந்த ஆரம்பம் தான் எங்களுக்குத் தேவைப்பட்டது. உண்மையில் எங்களுடைய இளம் வீரர்கள் சிறப்பாக விளையாடி தங்கள் திறனை வைத்து வெற்றியில் பங்காற்றியுள்ளனர். நாங்கள் என்னவெல்லாம் திட்டம் தீட்டினோமோ அதை எங்களுடைய வீரர்கள் முழுமையாக செயல்படுத்தினர்.



நான் எப்போதும் நிகழ்காலத்தில் இருக்க முயற்சி செய்கிறேன். இந்த இன்னிங்ஸ் எனக்கு வரலாறு. நிகழ்காலத்திலும் அடுத்த போட்டியிலும் கவனம் செலுத்த விரும்புகிறேன்"- என்றார். (எ)

# 'டோனி வந்தால் போதும்'

சென்னை, ஏப்.03

"எம். எஸ். டோனி துடுப்பாட்டம் செய்ய வந்தால் மட்டும் போதும்"- இவ்வாறு மேற்கு இந்திய தீவுகள் அணியின் முன்னாள் வீரர் கிறிஸ் கெயில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில், ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டியில் எம். எஸ். டோனி விளையாடுவதன் மூலம் அதன் மதிப்பு பல மடங்காக உயர்ந்துள்ளது. அவரால் முடிகின்ற வரையில் விளையாடலாம். தலை சிறந்த கிரிக்கெட் வீரர் மற்றும் சிறந்த மனிதரான அவர் மீது தேவை இல்லாத அழுத்தங்களை செலுத்த வேண்டாம். அவர் தான் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்கு மதிப்பு கூட்டுகிறார்.

அவரது விக்கெட் கீப்பிங் திறன் இன்னும் அதே சிறப்புடன் உள்ளது. அவர் இன்னும் திறமையாகச் செயல்படுகிறார். அவர் அணிக்காக எப்படி விளையாடுகிறார், அவரை எப்படிப் பயன்படுத்தப் போகிறார்கள் என்பது தான் முக்கியம். எல்லோரும் அவரை பார்க்க விரும்புகின்றனர். அதனால் அவர் 11ஆவது வீரராக துடுப்பாட்டம் செய்ய வந்தாலும் எனக்கு கவலை இல்லை. அவர்



துடுப்பாட்டம் செய்ய வந்தால் மட்டும் போதும். டோனி ஐ.பி.எல். கிரிக்கெட்டின் முக்கிய அங்கமாக உள்ளார்.

பலமுறை சம்பியன் பட்டம் வென்ற அவரைப் போன்ற ஒருவர் வெளியேறினால், அது ஐ.பி.எல். கிரிக்கெட்டின் மதிப்பை பெரியளவில் குறைக்கும். இந்தியாவில் சி.எஸ்.கே. அணி எங்கு விளையாடினாலும் விசில் போடுகிறாரார்கள். அந்த அற்புதத்தை நிகழ்த்துபவர் டோனி என்று கெயில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏப்ரல்...

வெளியே இருந்தால், அவர்களின் நிழல் ஒரு கணம் மறைந்துவிடும். அவர்களால் தங்கள் சொந்த நிழலைப் பார்க்க முடியாது. வேறு யாராவது அதைப் பார்க்கலாம். "இந்த நிலைமை 4 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை 10 நாட்களுக்கு நீடிக்கும்."

4 ஆம் திகதி சூரியன் நம் நாட்டுக்குள் நுழைகிறது. அதாவது இந்த உச்சம் பெறுதல் பருத்தித்துறை முனையில் ஆரம்பமாகிறது. ஏப்ரல் 5 ஆம் திகதி எலமல்தெனிய, ஏப்ரல் 6 ஆம் திகதி களுத்துறை, ஏப்ரல் 7 ஆம் திகதி கொழும்பு - களனி, ஏப்ரல் 8 ஆம் திகதி மஹியங்கனை போன்ற பகுதிகளில் சூரியன் உச்சத்தை அடையும்-என்றார்.(அ)

## உணவுப்...

விதிக்கப்பட்டுள்ள போதிலும் சந்தையில் எவரும் கட்டுப்பாட்டு விலைக்கு அமைய அரிசியை விற்பனை செய்வதில்லை என அவர் குறிப்பிட்டார்.

அந்தவகையில், சம்பா மற்றும் கீரிச் சம்பா ஆகிய அரிசி வகைகளை கட்டுப்பாட்டு விலைக்கு பெறுவது கடினமாக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே, அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை சந்தையில் முறையாக அமுல்படுத்தாவிடின் எதிர்வரும் ஓரிரு வாரத்தில் ஹோட்டல் உணவுப் பொருட்களின் விலைகளை அதிகரிக்க நேரிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

பால்மாவின் விலை 50 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் விலையேற்றத்துக்கு அமையவே ஹோட்டல் உணவுப் பொருட்களின் விலைகள் தீர்மானிக்கப்படுவதாகவும் அவர் கூறினார். (அ)

## மோடியின்...

எஸ்.ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், வெளியுறவுச் செயலாளர் மற்றும் மூத்த இந்திய அதிகாரிகள் என பலரும் கலந்து கொள்வார்கள்.

இந்தியப் பிரதமருடன் வெளியுறவு அமைச்சர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர், வெளியுறவுச் செயலாளர் மற்றும் பிற மூத்த இந்திய அதிகாரிகள் வருகை தர உள்ளனர்.

இந்தப் பயணத்தின்போது, பிரதமர் மோடி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோருடன் இரு தரப்பு பேச்சுக்களை நடத்த உள்ளார்.

மேலும், பிரதமர் மோடி, அநுராதபுரத்தில் புனித ஸ்ரீ மகா போதியில் வழிபாடு நடத்தவும், இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியில் இலங்கையில் முன்னெடுக்கப்படும் பல திட்டங்களைத் தொடங்கி வைக்கவும் உள்ளார்.

மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன, மோடியின் கொழும்பு பயணத்துக்கான பாதுகாப்புகளைக் கண்காணிக்க உள்ளார். ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவு மற்றும் இந்திய பாதுகாப்புக் குழுவும் ஒருங்கிணைந்து இந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பிரதமர் மோடியும் அவரது குழுவினரும் விமான நிலையத்தில் இருந்து கொழும்புக்கு பயணிக்கும்போதும், கொழும்பு மற்றும் அநுராதபுரத்தில் பயணிக்கும்போதும் பல வீதிகள் அவ்வப்போது மூடப்படும்.

கொழும்பு மற்றும் அநுராதபுரத்தில் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளன. பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக்காக அதிகளவான பொலிஸார் மற்றும் சிறப்புப் படையினர் பயன்படுத்தப்பட உள்ளனர்.

இதேவேளை, மோடியின் பாதுகாக்கான ஒத்திகை நேற்று நடத்தப்பட்டதாக அரச தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. (அ)

## தேர்தல்...

மீண்டும் இன்று வரை இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில், அதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதன்போது, வேட்பு மனுவுடன் "அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிறப்பு சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல்" என்ற நிபந்தனை பூர்த்தி செய்யப்படாமை தொடர்பாக நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

எனினும் அவை அல்லாத ஏனைய விடயங்களால் நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் தொடர்பான தீர்மானம் இன்று எடுக்கப்படும் என்றும், அதுவரை அதனுடன் தொடர்புடைய உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் நடவடிக்கைகளுக்கு விதிக்கப்பட்ட இடைக்கால தடையுத்தரவை நீடிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. (அ)

## இந்தியாவுடன்...

பதிலளித்த போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்திய பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் 4 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தருகின்றார். அதனை தொடர்ந்து எதிர்வரும் 5 ஆம் திகதி சுதந்திர சதுக்கத்தில் இடம்பெறவுள்ள வரவேற்பு நிகழ்வில் பங்கேற்பார். அதேவேளை ஜனாதிபதியுடன் இரு தரப்பு கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இதன்போது ஊடகங்களுக்கும் கலந்துரையாடல் தொடர்பில் வெளிப்படுத்தப்படும்.

அத்துடன், சாம்பூர் சூரிய மின்சக்தித் திட்டம் ஆரம்பித்தல் மற்றும் மதத்தலங்களுக்கு சூரிய மின்சக்தியை பெற்றுக் கொடுக்கும் திட்டம் என்பன முன்னெடுக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து இந்திய பிரதமர் எதிர்வரும் ஆறாம் திகதி அநுராதபுரம் ஸ்ரீ மகாபோதிக்கு செல்லவுள்ளார். இதன்போது அநுராத புரம் ரயில் நிலைய சமிக்ஞை கட்ட மைப்பை ஆரம்பிக்கும் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

மேலும் வலுசக்தி,சுகாதாரம், டிஜிற்றல் பொருளாதாரம்,மற்றும் பாதுகாப்பு தொடர்பில் இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைசாத்திடப்படவுள்ளன - என்றார். (அ)

## யாழில் பிறந்த...

கடந்த 19 ஆம் திகதி மேற்குறித்த பகுதியில் வசிக்கும் பெண்ணொருவருக்கு ஏழு மாதங்களில் இரட்டைக் குழந்தை பிறந்துள்ளது. இந்நிலையில் ஆண் குழந்தை தெல்லிப்பழை வைத்தியசாலையில் கண்ணாடி பெட்டியில் வைத்து கண்காணிக்கப்பட்டு வந்தது.

பின்னர் 28ஆம் திகதி பெண் குழந்தையும் தாயும் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஆண் குழந்தை தொடர்ந்தும் வைத்தியசாலையில் கண்ணாடிப் பெட்டியில் வைத்து கண்காணிக்கப்பட்டது. இந்நிலையில் தாயார் தினமும் வைத்தியசாலைக்கு வருகை தந்து ஆண் பிள்ளைக்கு பாலூட்டி வந்துள்ளார்.

பெண் குழந்தைக்கு தாயார் நேற்று காலை வீட்டில் வைத்து பாலூட்டியுள்ளார். காலை 6.00 மணியளவில் பெண் குழந்தைக்கு வயிற்றோட்டம் ஏற்பட்ட நிலையில் குழந்தை மயங்கியது. இந்நிலையில் குழந்தையை தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை குழந்தை உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக் கப்பட்டுள்ளது. (அ-05)

## இல்லங்களில் சேர்க்க...

நா.வேதநாயகன் யுனிசெவ் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்து கள நிலைமைகளை ஆய்வு செய்யும் யுனிசெப் அமைப்பின் பிரதிநிதிகள் குழு வடக்கு மாகாண ஆளுநரை, ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது ஆளுநரிடம், யுனிசெப் அமைப்பு முன்னெடுத்துள்ள திட்டங்கள் தொடர்பாகவும் தமது கள நிலைமை ஆய்வு தொடர்பாகவும் விளக்கமளித்தனர்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஆளுநர், 1991ஆம் ஆண்டு உதவி அரசாங்க அதிபராக தான் பதவியேற்ற காலத்திலிருந்து யுனிசெப் அமைப்பு பல்வேறு வகையான உதவிகளை எமது மக்களுக்குச் செய்து வருகின்றது. அதற்கான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வடக்கில் சிறுவர் துஷ்பிரயோகம், இளவயது கர்ப்பம் என்பன முன்னைய காலங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளன. மேலும், வடக்கு மாகாணம் தற்போது புதிய சவால்களை எதிர்கொண்டு வருகின்றது. பாடசாலை இடைவிலகல்கள் அதிகரித்துள்ளன. சிறுவர் இல்லங்களுக்கு சிறுவர்களை சேர்க்கும் போக்கு அதிகரித்துச் செல்கின்றது. இதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பாதிப்பால் ஏற்பட்ட வறுமை நிலைமை ஒரு காரணமாக உள்ளபோதும், பெற்றோர் மறுமணம் செய்வதால்தான் பெரியளவு பாதிப்பு ஏற்படுகின்றது. சிறுவர் இல்லங்களில் சிறுவர்களை இணைப்பதை ஊக்குவிக்கவேண்டாம் என அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது. ஆனால் சிறுவர் இல்லங்களை நோக்கி வருபவர்களை இணைக்காமல்விட்டாலும், பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது. குறிப்பாக சிறுவர் துஷ்பிரயோகத்துக்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக இருக்கின்றன. எனவே இது எமக்கு சிக்கலான நிலைமையாக உள்ளது எனவும் ஆளுநர் சுட்டிக்காட்டிக்காட்டினார்.

இதேவேளை, மனநல பாதிப்புக்குள்ளாகும் சிறுவர்களைப் பராமரிப்பதற்கான, தங்க வைப்பதற்கான அரச இல்லங்கள் இல்லை என்று வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்கள ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சந்திப்பில் யுனிசெப்பின் சிறுவர் பாதுகாப்பு தலைமை அதிகாரி ரியோனா அஸ்லான்சிவிலுடன் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகளும் பங்கேற்றனர். (அ)

## யாழில் குடிவரவு...

அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் அதிகளவான மாவட்டங்களைக் கொண்டுள்ள வடக்கு மாகாணத்தில் தற்போது வவு னியா மாவட்டத்தில் குடிவரவு - குடியகல்வுத் திணைக் களத்தின் பிராந்திய அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டுள் ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வாழ்கின்ற மக்கள் குடிவரவு மற்றும் குடியகல்வு விடயம்சார் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வவுனியா பிராந்திய அலுவலகத்துக்குப் பயணம் செய்வதற்கு அதிக நேரத்தைச் செலவிட வேண்டியுள்ளது.

வடக்கு மாகாண மக்கள் அதிகளவில் கடவுச்சீட்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளமையால், அவர்களுக்கான துரித சேவைகளை வழங்குவதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவ லகத்தை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பிப்பது பொருத்தமானதென 2025.01.31 அன்று ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் முன்மொழியப்பட்டுள்ள யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தை யாழ்ப்பாண மாவட்ட செயலக வளாகத்தில் இந்த மாதத்திலேயே நிறுவுவதற்கு பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது - என்றார். (அ)

## பிரிட்டனின்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மையில் 04 இலங்கையர்களுக்கு எதிராக ஐக்கிய இராச்சியத்தால் தடைவிதிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் தொடர்பாக அமைச்சரவை கவனம் செலுத்தியுள்ளது.

அதுதொடர்பாக விடயங்களை ஆராய்ந்து மேற்கொள்ளப்படவேண்டிய தொடர் நடவடிக்கைகள் பற்றி அமைச்சரவைக்கு விதந்துரைகள் அடங்கிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய வெளிவிவகாரங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் (சட்டத்தரணி) ஹர்ஷண நாணயக்கார பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர

உள்ளிட்ட அமைச்சர்கள் குழுவொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவின் பணிகளுக்கு தேவையெனக் கருதுகின்ற, குறித்த விடயம் தொடர்பான நிபுணத்துவத்துவம் மிக்க வேறெந்த அதிகாரியோ/ நிபுணர்களின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக குழுவுக்கு அதிகாரமளிப்பதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது -என்றார். (அ)

## இலங்கை...

யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகத்தில் நேற்றுக் கையளித்துள்ளனர்.

யாழ். மாவட்ட கடற்தொழிலா ளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் தலைவர் அந்தோனிப் பிள்ளை மரியதீசன் இது குறித்து தெரிவிக்கையில் -

இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கையினால் இலங்கையின் வடபகுதி மீனவர்கள் பல்வேறு பிரச்னைகளையும் பாதிப்புக்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

இதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென தொடர்ச்சியாக நாங்கள் கோரிக்கை விடுத்து வந்திருக்கிறோம். ஆனால் இலங்கை இந்திய அரசுகள் இந்தப் பிரச்னைக்கான தீர்வை ஏற்படுத்திக் கொடுக்காத நிலைமையே காணப்படுகிறது.

எனவே இலங்கைக்கு வருகின்ற இந்தியப் பிரதமர் இலங்கை இந்திய மீனவர் விவகாரத்துக்கு சரியான தீர்வொன்றை வழங்கவேண்டுமென கோரிக்கை விடுக்கிறோம்.

அதாவது எமது கடற்பரப்புக்குள் எக்காரணம் கொண்டும் இந்திய மீனவர்கள் அத்துமீறி வரக்கூடாது. அதனையும் மீறி வந்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அத்தோடு இந்திய மீனவர்களால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழத்துள்ள எமது மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டுமெனவும் கோரியுள்ளோம்.

மேலும் தொடர்ந்தும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால் அதற்கு எதிராக தொடர்ந்தும் குரல் எழுப்பி முன்னரைப் போன்று போராட்டங்களை முன்னெடுப்போம்-என்றார். (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## செவ்வந்தியை ஒத்த உருவமுள்ள பெண் கைது!

கொழும்பு, ஏப். 03

கணேமுல்லை சஞ்சீவ படுகொலைக்கு தொடர்பு டையவராகவும் தற்போது தலைமறைவாக உள்ளவ ருமான இஷாரா செவ்வந்தி என்ற பெண் அநுராதபுரம் நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் ஒருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண் செவ்வந்தியின் தோற் றத்துக்கு மிகவும் ஒத்த தோற்றமுடையவராவார். அவர் கைது செய்யப்பட்டபோது அவரிடம் போதைப்பொ ருளும் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான சஞ்சீவ குமார சமரரத்ன என்று அழைக்கப்படும் கணே முல்லை சஞ்சீவ என்பவரை துப்பாக்கியால் சுட்டு படு கொலை செய்த சம்பவத்தில் தலைமறைவாக உள்ள முக் கிய சந்தேக நபரான இஷாரா செவ்வந்தி குறித்து துல்லி யமான தகவல் வழங்குபவருக்கு 12 இலட்சம் ரூபாய் பரிசுத்தொகை வழங்கப்படும் என பொலிஸ் தலை மையகம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கச்சதீவை மீள கோரி தனிநபர் பிரேரணை!

### தமிழ்நாடு சட்டசபையில் ஸ்டாலின் முன்வைத்தார்



சென்னை, ஏப். 03

இலங்கைக்கு வழங்கிய கச்சதீவை மீளப்பெறவேண்டும் என்று கோரி தமிழ் நாடு சட்ட சபையில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தனிநபர் பிரேர ணையை நேற்று புதன்கிழமை சமர்ப் பித்தார்.

“தமிழ்நாடு மீனவர்களின் பாரம் பரிய மீன்பிடி உரிமைகளை நிலை நாட்டிடவும், இலங்கை கடற்படை யால் தமிழ்நாட்டு மீனவர்களுக்கு ஏற்படும் அனைத்து இன்னல்களை போக்கிட வும் கச்சதீவை மீண்டும் பெறுவதே நிரந்தர தீர்வாக அமையும்”, அவர் நேற்று முன்வைத்த தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், “இதனை கருத்தில் கொண்டு, இந்திய - இலங்கை ஒப் பந்தத்தை மறுபரிசீலனை செய்து, கச்சதீவைத் திரும்பப் பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இந் திய மத்திய அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

“உத்தியோகபூர்வ பயணமாக இலங்கை செல்லும் பிரதமர் மோடி இலங்கை அரசுடன் பேசி, அந் நாட்டு சிறையில் வாடும் நமது மீன வர்களை யும், அவர்களது படகுக ளையும் நல்லெண்ண அடிப்படையில் விடு தலை செய்து மீட்டுக் கொண்டுவர வேண்டுமென்றும் இந்த பேரவை ஒருமனதாக வலியுறுத்துவதாகவும் அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது. (ஐ)

## விபத்தில் குழந்தை பலி!

கொழும்பு, ஏப். 03

பேருந்து மோதியதில் 2 வயது குழந்தை ஒன்று உயிரிழந்தது.

களுத்துறை - வஸ்கடுவ பிர தேசத்தில் நேற்று புதன்கிழமை இந்த விபத்து இடம்பெற்றது.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தே இந்த விபத்தை ஏற்படுத்தியது. இதையடுத்து, பேருந்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார். (ஐ)

## வாக்காளர் அட்டை விநியோகம்

கொழும்பு, ஏப். 03

உள்ளூராட்சி மன்றத் தேர்த லுக்கான வாக்காளர் அட்டை கள் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை விநியோகிக்கப்படும் என்று அஞ்சல் மா அதிபர் ருவன் சத்குமார தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 20 ஆம் திகதி சிறப்பு விநியோக நாளாக அறிவிக்கப் பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

## பொலிஸாரின் கடமையை தடுத்த ஆறு பேர் கைது!

திருகோணமலை, ஏப். 03

நிலாவெளியில் பொலிஸாரின் கடமைக்கு இடை யூறு விளைவித்த 5 இளைஞர்களும் ஒரு பெண்ணுமாக 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மார்ச் 31ஆம் திகதி பொலிஸாரின் கடமைக ளுக்கு சிலர் இடையூறு ஏற்படுத்தும் காணொலி வெளியாகியிருந்தது.

இது தொடர்பில், விசாரணை நடத்திய நிலாவெளி பொலிஸார் ஒருவரை கைது செய்தனர். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்ற 5 ஆண்களும் ஒரு பெண்ணுமாக 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரண்டு சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களைக் கைது செய்ய நிலாவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முன்னதாக, திருகோணமலை நிலாவெளி பொலிஸ் பிரிவில் தலைக்கவசம் அணியாமல் மற்றும் அதிக சத்தத்தை எழுப்பியவாறு மோட்டார் சைக்கிளில் சென்றோரை கைது செய்ய முற்பட்ட போக்குவரத்து பொலிஸாரை கடமையை செய்ய விடாது இளைஞர் குழு ஒன்று தடுத்திருந்தது. அத்துடன், பொலிஸாரை அருகிலுள்ள வீடொன்றுக்குள் அடைத்து வைத்திருந் தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேர்தல் குறித்து 413 முறைப்பாடுகள்

கொழும்பு, ஏப். 03

எதிர்வரும் மே 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர் தல் தொடர்பில் நேற்றுமுன் தினம் வரை 413 முறைப் பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 02 முறைப்பாடுகளும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 382 முறைப்பா டுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 28 முறைப்பா டுகளும் கிடைத்துள்ளன என்றும் தேர்தல் ஆணைக் குழு மேலும் தெரிவித்துள் ளது. (ஐ)

## தென்னக்கோனை பதவி நீக்குவதற்கு விசேட குழுவை நியமிக்க பிரேரணை

கொழும்பு, ஏப். 03

விளக்கமறியலில் உள்ள தேசபந்து தென்னக்கோனை பொலிஸ் மா அதி பர் பதவியில் இருந்து நீக்குவதற்கான விசேட குழு ஒன்றை நியமிக்கும் பிரேரணை எதிர்வரும் 8 ஆம் திகதி விவாதமின்றி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

நேற்று புதன்கிழமை நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

தவறான நடத்தை, ஊழல், பதவி துஷ்பிரயோகம், கடமை தவறுதல் மற்றும் பாரபட்சம் ஆகிய குற்றச்சாட் டுகளின் அடிப்படையில் தேசபந்து தென்னக்கோனை பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணை ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கள் 115 பேரின் கையொப்பங்களுடன் அண்மையில் சபாநாயகரிடம் சமர்ப் பிக்கப்பட்டது.

இந்தப் பிரேரணை இந்த மாதம் 8 ஆம் அல்லது 9 ஆம் திகதி நாடாளு மன்றில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற் றப்படும் என அமைச்சரவை பேச்சா ளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ முன்னதாக அறிவித்திருந்தார்.

இதனிடையே, 2002ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க அதிகாரிகளை பதவி நீக்குதல் சட்டத்தின் பிரிவு 5 இன் படி விசாரணைக் குழு நியமிக்கப்பட வேண்டும் என சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள் ளது.

அதற்கு அமைவாகவே தேசபந்து தென்னக்கோனை காவல்துறை மா அதிபர் பதவியில் இருந்து நீக்கம் செய்வதற்கான விசேட குழுவை நியமிக்கும் பிரேரணை எதிர்வரும் 8ஆம் திகதி விவாதம் இன்றி பாரா ளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


## மறைந்த ஆயர் இராயப்பு யோசப்புக்கு அஞ்சலி

மன்னார், ஏப். 03

மன்னார் மறை மாவட்டத் தின் மறைந்த முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு யோசப்பு ஆண்டகையின் 4 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று மன்னாரில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மன்னார் நகர பகுதியில் அமைந்துள்ள அன்னாரின் உருவச் சிலைக்கு முன்பாக நடைபெற்றது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் வி. எஸ். சிவகரன் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் மறைந்த ஆயரின் உருவச்சி லைக்கு அருட்தந்தை எஸ். ஜெயபாலன் அடிகளார் உள்ளடங்களாக அருட்சகோ தரி,பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து மலர்



தூவி அஞ்சலி செலுத்தினர்.

தமிழ்த் தேசிய எழுச்சிக்காக பணியாற்றிய மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை நீண்ட காலமாக சுகயீனமடைந்த நிலையில் கடந்த 2021 ஏப்ரல் முதலாம் திகதி காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொழும்பு செல்ல மறுத்ததால் பேருந்தை தாக்கிய சிப்பாய்!

கொழும்பு, ஏப். 06

தன்னை கொழும்புக்கு ஏற் றிச் செல்ல மறுத்தமையால் இ. போ. ச. பேருந்தை தாக்கி சேதப்படுத்திய படை சிப்பாய் ஒருவரை பண்டாரவளை பொலிஸார் கைது செய்துள் ளனர்.

பனாகொடை இராணுவ முகாமை சேர்ந்த 35 வயதான சிப்பாயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

இலங்கை போக்குவரத்து சபையின் பண்டாரவளை டிப்போவுக்கு சொந்தமான பேருந்து ஒன்று கொழும்பிலி ருந்து பதுளை நோக்கி பய ணித்துவிட்டு மீண்டும் பண் டாரவளை டிப்போவை நோக்கிப் பயணித்தது.

அப்போது, இனந்தெரி யாத நபர்கள் சிலருடன் மோட்டார் சைக்கிளில் வந்த இராணுவ சிப்பாய் பேருந்தை மறித்து அதில் ஏறியுள்ளார். பின்னர், தன்னை கொழும் புக்கு அழைத்து செல்லுமாறு சாரதியிடமும் நடத்துநரிட மும் கூறியுள்ளார்.

இதற்கு, ஏற்கனவே கொழும்பிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்துவிட்டதா கவும் கடமை முடிவடைந்த தால் தாம் பண்டாரவளை டிப்போவுக்கு செல்வதாக சாரதியும் நடத்துநரும் சிப் பாய்க்கு கூறியுள்ளனர்.

இதையடுத்து, சிப்பாய் சாரதியுடனும் நடத்துநரு னும் தகராறில் ஈடுபட்டது டன், பேருந்தையும் தாக்கி சேதப்ப டுத்தியுள்ளார்.

இது தொடர்பில் பண்டா ரவளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் சந்தேகநப ரான இராணுவ சிப்பாய் கைது செய்யப்பட் டார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org